வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

பக்கங்கள் : 16

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu

22.01.2021 வெள்ளிக்கிழமை




# அழுத்தங்களிலிருந்து தப்ப அரசுக்கு மனித உரிமைத் திட்டமே அவசியம்!

## பிரதீப மஹாநாமஹேவா ஆலோசனை



கொழும்பு, ஜனவரி 22

அமெரிக்காவின் புதிய நிர்வாகத்தால் இலங்கைக்கு எதிர்காலத்தில் ஏற்படவுள்ள அழுத்தத்தைக் குறைக்க உட னடியாக தேசிய மனித உரிமைத் திட்டம் வகுக்கப்படவேண்டும் என்று பேராசிரியர் பிரதீப மஹாநாமஹேவா வலியுறுத்தியுள்ளார்.

இலங்கைக்கு எதிரான மனித உரிமை குற்றச்சாட்டுகளைத் தொடர அமெரிக்கா தயாராக இருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். 02

## நேற்று மாத்திரம் 887 பேருக்கு கொரோனா உறுதி

கொழும்பு, ஜன. 22

இலங்கையில் நேற்று மாத்திரம் 887 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதன்படி நாட்டில் மொத்தத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 56 ஆயிரத்து 76 ஆக அதிகரித்துள்ளது.

இவர்களில் 47 ஆயிரத்து 984 பேர் குணமடைந்துள்ளனர் 02



06

ஜெனிவாவின் பிடி இறுகும்



07

கொரோனாவை வைத்து எதிரணி அரசியல்



13

ஐ.பி.எல்லில் இருந்து மலிங்க ஓய்வு



14

நிலாவரையில் திடீர் அகழ்வு

## எஞ்சிய இரு மீனவர்களின் சடலங்களும் நேற்று மீட்பு!

யாழ்ப்பாணம், ஜன. 22

இலங்கைக் கடல் எல்லையில் இலங்கைக் கடற்படையினரின் ரோந்துப் படகுடன் மோதி, ட்ரோலர் படகுடன் மூழ்கி மாயமான நான்கு இந்திய மீனவர்களில் எஞ்சிய இருவரது சடலங்கள் நேற்று மீட்கப்பட்டன.

கடந்த 18ஆம் திகதி புதுக்கோட்டை மாவட்டம், கோட்டைப்பட்டினத்திலிருந்து இராமநாதபுரம் மாவட்டம், தங்கச்சிமடத்தைச் சேர்ந்த ஆரோக்கிய ஜேசு என்பவரது படகில் மெசியா, 02

## ஒருமுறை மட்டும் பயன்படும் பிளாஸ்ரிக் ஏப்ரல் முதல் தடை

### வர்த்தமானியில் அமரவீர கையொப்பம்

கொழும்பு,ஜன.22

ஒருமுறை மாத்திரம் பயன்படுத்தப்படும் பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் உற்பத்தியிலான பொருள்களை தடைசெய்யும் தீர்மானம் எதிர்வரும் ஏப்ரல் மாதம் வரை நீடிக்கப்பட்டுள் 02

## மேலும் இருவர் மரணம்

கொழும்பு, ஜன. 22

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களில் மேலும் இருவர் உயிரிழந்துள்ளனர்.

இதன்படி நாட்டில் கொரோனாத் தாக்கத்தால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 276 ஆக அதிகரித்துள்ளது. 02

## யாழ்.இந்து பழைய மாணவன் கொரோனாவால் உயிரிழப்பு!



யாழ்ப்பாணம், ஜன. 222

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பழைய மாணவனும் 2004 - 2005ஆம் ஆண்டின் கல்லூரியின் கிரிக்கெட் அணியின் தலைவராகவும் விளங்கிய மயூரப்பிரியன் (வயது 32) கொரோனா வைரஸ் தொற்றால் 02

## 47 கிலோ மஞ்சள் சிக்கியது



யாழ்ப்பாணம், ஜன. 22

காரைநகர் பகுதியில், இந்தியாவில் இருந்து எடுத்துவரப்பட்டு மறைத்து வைத்திருந்ததாகக் கருதப்படும் 47 கிலோ மஞ்சள் இடமாற்றப்பட்ட வேளை கடற்படையினரால் நேற்று கைப்பற்றப்பட்டது.

ஓட்டோ ஒன்றில் ஒரு பொதியில் மஞ்சள் எடுத்துச் செல்வதாகக் கிடைத்த தகவலின் அடிப்படையில் குறித்த ஓட்டோ கடற்படையினரால் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது. இதன்போதே மஞ்சள் சிக்கியது. ஓட்டோ சாரதியும் கைதுசெய்யப்பட்டார்.

## சுகாதார அமைச்சையும் விட்டுவைக்காத வைரஸ்

### 11 பேர் கொரோனாவுக்கு இலக்கு

கொழும்பு, ஜன. 22

கொரோனா வைரஸ் தொற்று சுகாதார அமைச்சுக்குள்ளும் புகுந்து பலரைத் தொற்றுக்கு உள்ளாக்கியுள்ளது.

சுகாதார அமைச்சைச் சேர்ந்த பணிக்குழாமினர் 11 பேருக்குக் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது எனச் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குண 02

## தனியார் வைத்தியசாலைகளால் கொரோனா தடுப்பு பின்னடைவு

### இராணுவத் தளபதி கவலை



கொழும்பு, ஜன.22

சுகாதார அமைச்சிடம் அனுமதி பெறாத தனியார் வைத்தியசாலைகள், பிராந்திய மற்றும் சிறு ஆய்வு கூடங்களில் அன்ரிஜென் மற்றும் பி.சி.ஆர். பரிசோதனைகளை மேற்கொள்கின்றன. 02

### யாழ்.பல்கலை மாணவி உட்பட

## வடக்கில் நேற்று 9 பேருக்கு கொரோனா தொற்று உறுதி

யாழ்ப்பாணம், ஜன.22

கிளிநொச்சியில் மூவருக்கும் யாழ்ப்பாணத்தில் நால்வருக்கும் முல்லைத்தீவில் இருவருக்கும் என வடக்கு மாகாணத்தில் 9 பேருக்கு நேற்று கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இவர்களில் ஒருவர் யாழ். பல்கலைக்கழக 02

## அரசமைப்பு உருவாக்கத்தில் நல்லாட்சியை பின்பற்றுங்கள்

### ஆளும் தரப்பிடம் எதிர்க்கட்சி கோரிக்கை



கொழும்பு, ஜன.22

அரசமைப்பை உருவாக்க நல்லாட்சியின் வழிமுறையைப் பின்பற்றுமாறும் அரசாங்கத்துடன் இருக்கும் சட்டத்தரணிகள் குழு ஒன்று மாத்திரம் அரசமைப்பை வரைவுக்குட்படுத்த முடியாது என்றும் 02

## எஞ்சிய இரு...

நாகராஜன், செந்தில்குமார், சாம் ஆகிய நால்வரும் மீன்பிடிக்கக் கடலுக்குள் சென்றனர்.

மீனவர்கள் நெடுந்தீவுக்கு கச்சதீவுக்கும் இடையே மீன்பிடித்துக் கொண்டிருக்கும்போது இலங்கைக் கடற்படையினர் எல்லை தாண்டி மீன்பிடித்ததாக வழக்குப் பதிவு செய்யப் போவதாக எச்சரித்துள்ளனர். இதனால் அச்சம் அடைந்த மீனவர்கள் அங்கிருந்து தப்ப முயன்றபோது இலங்கை கடற்படையினரின் ரோந்துக் கப்பல் மீது மோதியதில் படகு நடுக்கடலில் மூழ்கியது எனக் கூறப்படுகின்றது.

இதனால் படகில் இருந்த நால்வரும் நடுக்கடலில் மாயமானார்கள். அவர்களை இலங்கைக் கடற்படையினர் நெடுந்தீவுக் கடற்கரைப் பகுதியில் தேடி வந்த நிலையில் நேற்று இருவரது சடலங்கள் மீட்கப்பட்டன.

எஞ்சிய இரண்டு பேரைத் தேடும் பணி தீவிரமாக நடைபெற்று வந்த நிலையில் நேற்று நெடுந்தீவு அருகே கடற்படையின் மூன்றாம் நாள் தேடுதலின் போது எஞ்சிய மீனவர்களான நாகராஜன், மேசியா ஆகிய இருவரது சடலங்கள் மீட்கப்பட்டு காங்கேசன்துறை கடற்படை முகாமுக்கு எடுத்துவரப்பட்டன.

இந்திய மீனவர்களின் சடலங்கள் மல்லாகம் நீதிமன்ற நீதிவானின் உத்தரவின் பேரில் யாழ்.போதனா வைத்திய சாலையில் இந்தியத் துணை தூதரக அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்படவுள்ளன.

## அரசமைப்பு...

பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரி யெல்ல தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

சகல இனம் மற்றும் சகல கட்சிப் பிரதிநிதிகளையும் உள்வாங்கி அவர்களின் பங்கேற்பில் புதிய அரசமைப்பு வரைவு சார் ஏற்பாடுகளை தற்போதைய அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும்.

நல்லாட்சி அரசாங்கம் முழுப் பாராளுமன்றத்தையும் அரசமைப்பு சபையாக மாற்றியது. 70 இற்கும் மேற்பட்ட கலந்துரையாடல்களில் நான் பங்குபற்றியிருக்கிறேன். 20 குழுக்களை அமைத்தோம், எதிர்க்கட்சியினரை உள்வாங்கினோம். 75 நாள் ஒன்று கூடினோம்.

பந்துல குணவர்த்தன ஒரு குழுவுக்குத் தலைமை தாங்கினார். மாகாண சபைகளுக்கு கூடிய அதிகாரம் வேண்டும் என்று கூறியவர்கள் தென் பகுதி ஆளுநர்கள். லால் விஜயநாயக்கவை நாடு முழுவதும் அனுப்பி அவரின் அறிக்கையையும் உள்வாங்கினோம்.

இந்தப் பின்னணியில் எங்களது ஆட்சி மாறியது. எங்கள் பரிந்துரைகளை ஏற்காவிட்டாலும் எங்கள் முறைமைகளை முன்கொண்டு செல்லுங்கள். முழு பாராளுமன்றத்தையும் அரசமைப்பு சபையாக மாற்றுங்கள். எங்கள் பங்களிப்பை நாங்கள் வழங்குவோம்.

2018 ஆம் ஆண்டு எங்கள் வரைவுக்கு பாராளுமன்றத்தில் 90 வீத அனுமதி இருந்தது. நாங்கள் விட்ட இடத்திலிருந்து முன்னோக்கி கொண்டு செல்லுங்கள்.

அரசாங்கத்தின் பிழையான வெளிவிவகாரக் கொள்கையின் பிரதிபலிப்புதான் இந்தியாவுக்கு கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையம் வழங்கப்பட்டதாகும். நல்லாட்சி அரசாங்கம் குத்தகைக்கு வழங்கத்தான் முடிவு செய்தது. இவர்கள் விற்கப் போகிறார்கள். சீனாவுக்கு வழங்கினால் எங்களுக்கும் வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இந்தியா உள்ளது.

கொரோனா தடுப்பூசி கொள்வனவுக்கு நிதி இல்லை. வெட்கம் இல்லாமல் உலக வங்கியிடம் கடன் கேட்கிறார்கள். நிதி இன்மைக்கு பிரதானமான காரணம் ஆட்சிக்கு வந்த ஆரம்ப நாட்களில் தமக்கு பிரசாரம் மேற்கொண்ட உயர் வர்த்தகர்களின் வரிச்சலுகைகளை இல்லாமல் செய்தமையாகும்.இதனால் 800 மில்லியன் ரூபா இல்லாமல் போனது- என்றார். (அ-எ)

## சுகாதார...

வர்த்தன தெரிவித்துள்ளார்.

இவ்வாறு தொற்று உறுதி செய்யப்பட்டவர்களுடன் தொடர்புபட்டிருந்த 70 பேர் அடையாளம் காணப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் எனவும் அவர் மேலும் கூறினார்.

## நேற்று மாத்திரம்...

எனவும், 7 ஆயிரத்து 816 பேர் வைத்திய சாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

## யாழ். இந்து...

உயிரிழந்துள்ளார்.

புலம்பெயர் நாடுகளில் கொரோனாவுக்கு இலக்காகிப் பலியாகும் தமிழர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## மேலும் இருவர்...

பேலியகொடை பகுதியைச் சேர்ந்த 71 வயதான பெண் ஒருவரும், அத்துருகிரிய பகுதியைச் சேர்ந்த 46 வயதான ஆண் ஒருவருமே இறுதியாக உயிரிழந்துள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

## தனியார் வைத்திய...

இவ்வாறான நடவடிக்கைகள் தொற்றுப் பரவலுக்கு எதிரான போராட்டத்துக்குப் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளன என இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா கவலை வெளியிட்டுள்ளார்.

இவ்வாறான பிராந்திய மற்றும் சிறு ஆய்வு கூடங்களில் பரிசோதனையை மேற்கொண்டு தொற்று உறுதி செய்யப்படுவர்கள் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படாமல் மறைந்து கொள்வதாகவும் இராணுவத் தளபதி கூறினார்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்த்தன, இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா ஆகியோர், தனியார் துறையின் உயர் தொழில்நுட்ப ஆய்வு கூட முகாமையாளர்களுடன் நேற்று விசேட சந்திப்பொன்றை நடத்தினர்.

இந்தச் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கவலை வெளியிட்டுள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்-

தனியார் வைத்தியசாலைகள் அன்ரிஜென் மற்றும் பி.சி.ஆர். சோதனைகளுக்கு வெள்வேறு கட்டணத்தை அறவிடுவதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. கொரோனா பரிசோதனைகளை முன்னெடுப்பதற்கு தொழில்நுட்ப ரீதியாகப் பொருத்தப்பட்ட 30 ஆய்வு கூடங்கள் மாத்திரமே சுகாதாரத்துறையால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

பரிசோதனைகளுக்கான தற்போதைய கட்டண வரையறைகளை மக்களின் நலனுக்காக மேலும் குறைக்க முடிந்தால் அது மிகவும் சிறந்ததாகும். மாறாக வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை தவறாகப் பயன்படுத்தக்கூடாது. உக்ரைனிலிருந்து வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு குறிப்பிட்ட சில தனியார்துறை மருத்துவமனைகளுக்கு பி.சி.ஆர். பரிசோதனைகளை நடத்த சுகாதார அதிகாரிகளால் அனுமதியளிக்கப்பட்டுள்ளது- என்றார்.

இதன்போது சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்தன, இந்த நடைமுறைக்கான வழிகாட்டுதல்களையும் விதிமுறைகளையும் கண்டிப்பாக கடைப்பிடிக்க வேண்டும். தவறான நடைமுறைகளை நாடாமல் பரிசோதனை முறையின் நம்பகத்தன்மயை மிக உயர்ந்த மட்டத்தில் உறுதிப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். (அ-எ)

# பிரம்டனில் முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி!



முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபியை கனடா- பிரம்டனில் அமைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பிரம்டன் மேயர் பற்றிக் பிரவுண் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் தமிழர்கள் இனப்படுகொலை செய்யப்பட்டவேளை 75,000 தமிழர்கள் கொல்லப்பட்டனர் என பற்றிக் பிரவுண் தெரிவித்துள்ளார்.

முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி அழிக்கப்பட்டமை இலங்கை அரசாங்கத்தின் கலாச்சார இனப்படுகொலையின் ஒரு தொடர்ச்சி என தெரிவித்துள்ள அவர், எவரும் உயிரிழக்கவில்லை என காண்பிப்பதற்கும் வரலாற்றை மாற்றி எழுதுவதற்கும் இலங்கை அரசாங்கம் முயல்கிறது எனவும் தெரிவித்துள்ளார்.

எங்கள் சொந்த செலவில் முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபியை அமைப்பதற்கு பிரம்டன் மாநகர சபை தீர்மானித்துள்ளது என குறிப்பிட்டுள்ள அவர், இலங்கை அரசாங்கம் தனது இரத்தக்கறை படிந்த வரலாற்றை வெள்ளையடிப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ள அதேவேளை நாங்கள் கனடாவில் அதற்கு எதிர்மாறானதை செய்வோம் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

## ஒருமுறை மட்டும்...

ளது.

இதற்கமைய ஏப்ரல் மாதத்தின் முதல் வாரத்திலிருந்து இந்தத் தீர்மானத்தை செயல்படுத்தும் வர்த்தமானியில் சுற்றுலாத்துறை அமைச்சர் மஹிந்த அமரவீர கையொப்பமிட்டுள்ளார்.

ஒருமுறை மாத்திரம் பாவனைக்குப் பயன்படுத்தப்படும் பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் உற்பத்தியிலான பொருள்களை இம்மாதத்தின் முதல் வாரத்திலிருந்து தடை செய்யும் யோசனையை சுற்றுலாத்துறை அமைச்சர் மஹிந்த அமரவீர கடந்த வருடம் அமைச்சரவையில் முன்வைத்தார்.

தடைசெய்ய தீர்மானிக்கப்பட்ட பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் உற்பத்தி யில் ஈடுபடுபவர்களுக்கு நிவாரணம் மற் றும் இதர நடவடிக்கைகளுக்கான கால அவகாசம் வழங்கவேண்டும் என அமைச் சரவை மட்டத்தில் தீர்மானம் எடுக்கப் பட்டது. இதற்கமைய இரண்டு மாத கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

இதற்கமைய வாசனைத்திரவியங்கள் மற்றும் நீராகார பொருள்கள் அடைக்கப்பட்ட சிறு பொலித்தீன் பைக்கெற், காற்று நிரப்பப்பட்ட பிளாஸ்ரிக் உற்பத்தியிலான விளையாட்டுப் பொருள்கள், மைக்ரோன் 20 இற்கு குறைவான லஞ்சீற் (உணவு பொதியுறை) ஆகிய உற்பத்திகளை ஏப்ரல் மாதத்திலிருந்து உற்பத்தி செய்யவும், பகிர்ந்தளிக்கவும் விதிக்கப்பட்டுள்ள தடை ஏப்ரல் மாதம் முதல் வாரத்திலிருந்து அமுல்படுத்தப்படும்- என்றார். (அ-எ)

## வடக்கில்...

முகாமைத்துவ பீடத்தில் கல்வி கற்கும் மாத்தளையைச் சேர்ந்த மாணவி என வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவபீட ஆய்வுகூடத்தில் நேற்று 276 பேரின் மாதிரிகள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

அவர்களில் 9 பேருக்கு தொற்று கண்டறியப்பட்டுள்ளது.

கிளிநொச்சி பூநகரி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 3 பேருக்கும் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. அவர்கள் மூவரும் கொழும்பிலிருந்து வருகை தந்த நிலையில் சுயதனிமைப்படுத்தப்படிருந்தவர்கள்.

சங்கானை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவைச் சேர்ந்த ஒருவருக்கு தொற்றுள்ளமை நேற்று பரிசோதனையில் உறுதிப்படுத்தப்பட்டது. அவரும் கொழும்பிலிருந்து வருகை தந்த நிலையில் சுயதனிமைப்படுத்தப்பட்டிருந்தவர்.

இதேவேளை, யாழ்ப்பாணம் பல்கலைக்கழக முகாமைத்துவபீட மாணவி ஒருவருக்கு தொற்றுள்ளமையும் நேற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இவர் மாத்தளையிலிருந்து கற்கைகளுக்கு திரும்பிய நிலையில் விடுதியில் சுயதனிமைப்படுத்தப்பட்டிருந்தார். இந்நிலையிலேயே அவருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது- என்றார். (அ-எ)

## அழுத்தங்களி...

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாக ஜோ பைடன் பதவியேற்ற பின்னர், முன்னாள் ஜனாதிபதி ட்ரம்பின் நிர்வாகம் முழுமையாக செயலிழந்துள்ளது.

விலகிச் சென்ற அனைத்து உலக அமைப்புகளும் மீண்டும் அமெரிக்காவுடன் இணைந்துகொண்டன. பெப்ரவரி மாதத்தில் ஐக்கிய நாடுகளின் மனித உரிமை கூட்டத்தொடர் ஆரம்பமாகும். ட்ரம்ப் ஆட்சியில் அமெரிக்க பிரதிநிதிகள் அங்கிருந்து நீங்கியிருந்தனர்.

தற்போது, ஜோ பைடன் மற்றும் கமலா ஹாரிஸ் ஆகியோர் இணைந்து 2015ஆம் ஆண்டு இலங்கைக்கு எதிராக கொண்டுவரப்பட்ட மனித உரிமை பிரேரணையை மீண்டும் முன்கொண்டு செல்வார்கள். அவர்களுக்கு பின்னணியில் உள்ள அணியினரை பார்க்கும் போது இது தெளிவாகின்றது.

எனவே, இலங்கையில் முடிந்தால் உடனடியாக தேசிய மனித உரிமைத் திட்டமொன்று வகுக்கப்பட வேண்டும்- என்றார்.

## அமெரிக்காவில்...

- பேச்சு எழுத்தாளர் - ஜோ பைடன் , கமலா ஹரிஸ் : வினய் ரெட்டி.
- சிரேஷ்ட இயக்குநர் தொழில்நுட்பம், தேசிய பாதுகாப்பு: தருண் சப்ரா.
- வரவுசெலவு திட்ட முகாமைத்துவம்: நீரா டன்டன்.
- வெள்ளை மாளிகை துணை சட்டத்தரணி: றீமா ஷா.
- துணை ஊடக செயலாளர்: வேதந் பட்டேல்.
- காலநிலை கொள்கை வகுப்பு சிரேஷ்ட ஆலோசகர்: சோனியா அகர்வால்.
- வெள்ளை மாளிகை கணணிப் பொறி முறை முகாமையாளர் : ஆயிஷா ஷா.
- தென்னாசிய சிரேஷ்ட இயக்குநர்: சுமோனா குகா.
- வெள்ளை மாளிகையின் ஜனாதிபதி ஜோபைடனின் இணை சட்ட ஆலோசகர் : நேகா குப்தா.
- தேசிய பாதுகாப்பு கவுன்ஸிலின் ஜனநாயக மற்றும் மனித உரிமைகள் இயக்குநர்: சாந்தி கலாதில்.

இவர்களில் பெரும்பாலானவர்கள் இந்தியாவை பூர்வீகமாக கொண்டிருந்த போதிலும், தந்தை தாய்வழி மூலமாக பல்வேறு அமெரிக்க இனக்கலப்புகளோடு சம்பந்தப்பட்டவர்களாகவே இருக்கின்றனர்.

இந்தியர்களது இந்த நியமனங்கள், அமெரிக்காவிலும் ஒரு குட்டி இந்திய சாம்ராஜ்யம் அறிவுபூர்வமான முறையில் உருவாகிவருவதையே அவதானிக்க முடிகிறது.

ஈழநாடு
Eelanadu
22.01.2021 வெள்ளிக்கிழமை
சார்வரி, தை 09

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

e-mail: editor@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

## பைடன் தொடர்பான நம்பிக்கை

மிகவும் பரபரப்புடன் எதிர்பார்க்கப்பட்ட அமெரிக்காவின் புதிய ஜனாதிபதிக்கான பதவியேற்பு நிகழ்வு முடிவுற்றிருக்கின்றது. பதற்றங்களை ஏற்படுத்துவார் என்று எதிர்பார்க்கப்பட்ட ரொனால்ட் ட்ரம் பதவியேற்பில் பங்குகொள்ளவில்லை. "நாம் எதற்காக வந்தோமோ அதனை நிறைவேற்றியிருக்கின்றோம்" என்று தனது இறுதி உரையில் தெரிவித்திருக்கும் ட்ரம்ப், மிகவும் அமைதியாக வெள்ளை மாளிகையிலிருந்து வெளியேறியிருக்கின்றார்.

இனிவரப்போகும் நான்கு வருடங்களில் பைடன் எவ்வாறு அமெரிக்காவை வழிநடத்தப் போகின்றார் என்பது தொடர்பில் பலவாறான அபிப்பிராயங்கள் நிலவுகின்றன. குறிப்பாக, ட்ரம்பின் காலத்தில் அமெரிக்கா அதன் உலகளாவிய செல்வாக்கை இழந்துவிட்டதாகவும் அதனை மீளவும் தூக்கி நிறுத்துவதே பைடனின் பிரதான பணியாக இருக்குமென்பதும் பலரதும் கணிப்பு. முக்கியமாக, மீளவும் அமெரிக்காவின் உலகளாவிய தலைமைத்துவத்திற்கான ஆதரவை பெறுவதில் பைடன் கூடுதல் கவனம் செலுத்துவார் என்றே பல அமெரிக்க அரசியல் அவதானிகள் கருதுகின்றனர். ஆனால், அது அவ்வளவு சுலபமானதல்ல என்பதும் அவர்களின் கணிப்பாக இருக்கின்றது.

ட்ரம்ப் நிர்வாகத்தின்கீழ், அமெரிக்கா ஐக்கிய நாடுகள் சபையிலிருந்து அதிகம் விலகிச் சென்றிருந்தது. அதாவது, ஐ. நா. மனித உரிமைகள் பேரவையிலிருந்து விலகியது. உலக சுகாதார நிறுவனத்துடன் முரண்பட்டது. இதனை சரிசெய்யும் வகையில் பைடனின் நிர்வாகம் மீளவும் ஐ. நாவுடன் நெருங்கிச் செயல்படுவதில் கூடுதல் கவனம் செலுத்துமென்பது ஒரு பொதுவான பார்வை. அதற்கான வாய்ப்புக்கள் நிச்சயமுண்டு. ஏனெனில், அமெரிக்கா அதிகம் ஐ. நாவிலிருந்து விலகிச் செல்லுமாக இருந்தால், அந்த இடத்தை சீனா கைப்பற்றிவிடக்கூடுமென்னும் ஒரு கணிப்பு அமெரிக்க அரசியல் நிபுணர்களிடம் உண்டு. இந்த நிலையில், பைடன் நிர்வாகம் அதனை சரிசெய்ய வேண்டுமென்பதே அவர்களின் அறிவுரையாகவும் இருக்கின்றது.

அமெரிக்காவில் ஆட்சி மாற்றமொன்று ஏற்பட்டமை தொடர்பில் தமிழ் தரப்புக்கள் மத்தியில் மகிழ்ச்சி நிலவுவதை காணமுடிகின்றது. அமெரிக்கா மீளவும் ஐ. நா மனித உரிமைகள் பேரவையுடன் இணைந்து பணியாற்றும் முடிவை எடுத்தால், மீளவும் இலங்கை விவகாரத்தில் அமெரிக்கா கூடுதல் கரிசனையை காண்பிக்கலாம். அவ்வாறானதொரு நிலைமை ஏற்பட்டால், அது தமிழர்களுக்கு சாதகமாக அமையுமென்பதே மேற்படி மகிழ்ச்சிக்கு காரணம். இதற்கான வாய்ப்புக்கள் இல்லாமலில்லை. ஆனால், இவ்வாறான விடயங்கள்மீது அளவுக்கதிகமாக நம்பிக்கை வைப்பதும் பொருத்தமான ஒன்றல்ல.

பைடனின் நிர்வாகம் மனித உரிமைகள் சார்ந்து அழுத்தங்களை பிரயோகிப்பதற்கான வாய்ப்புக்கள் இருந்தாலும்கூட, தமிழர் தரப்புக்கள் எதிர்பார்ப்பது போன்று கடுமையான அழுத்தங்களை பிரயோகிப்பதற்கான வாய்ப்புக்கள் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றன. ஆரம்பத்தில் மிதமான அழுத்தங்களும் பின்னர் கொஞ்சம் கடுமையான அழுத்தங்களையும் பிரயோகிப்பதற்கான வாய்ப்புக்களும் உண்டு. ஆனால், அமெரிக்க அழுத்தங்கள் மனித உரிமைகளின் பெயரால் முன்வைக்கப்பட்டாலும் கூட, நிச்சயம் மனித உரிமை என்பது இரண்டாம் நிலை விவகாரம்தான். இதனை விளங்கிக்கொள்ளாமல், பைடனின் நிர்வாகம் தொடர்பில் அதிகம் கற்பனை செய்தால் ஏமாற்றங்களே விஞ்சலாம். அழுத்தங்கள் எவ்வாறானதாகவும் இருக்கலாம். ஆனால், அவ்வாறான அழுத்தங்களால் கிடைக்கும் வாய்ப்புக்களை தமிழர் தரப்பு எவ்வாறு புத்திசாதுர்யமாக கையாளுகின்றது என்பதில்தான் அனைத்து விடயங்களும் தங்கியிருக்கின்றன. வாய்ப்புக்களை பயன்படுத்தத் தெரியாவிட்டால், அழுத்தங்களால் தமிழ் மக்களுக்கு எந்தவொரு நன்மையும் கிடைக்கப் போவதில்லை.

# அமெரிக்காவில் உருவாகும் 'இந்திய சாம்ராஜ்யம்'

- அலசுவது இராஜதந்திரி -



இந்தியாவின் ஆன்மீகத் தலைவரான சுவாமி விவேகானந்தர் 128 வருடங்களுக்கு முன்னர், அமெரிக்காவின் சிக்காக்கோ நகரில் உலக மதங்களின் பாராளுமன்றத்தில் நிகழ்த் திய உரையில் சபையிலிருந்தோரை நோக்கி, "சகோதர, சகோதரிகளே" என்று உரையாற் றியபோதே, இந்தியாவின் உயரிய நாகரிகம் குறித்து அன்றைய சர்வதேச சமூகம் அறிந்திருந்தது.

அன்று அமெரிக்க ஜனாதிபதியாக இருந்தவர் குரோவர் கிளீவ்லண்ட் என்பது குறிப்பிடத்தக்கது.

அச்சமயம், 128 ஆண்டுகளுக்குப் பின்னர் இந்தியாவை பூர்வீகமாகக் கொண்ட கமலா தேவி ஹரிஸ் என்ற பெண்மணி அமெரிக்காவின் உப ஜனாதிபதியாக வருவார் என சுவாமி விவேகானந்தர் கனவில்கூட நினைத்துப் பார்த்திருக்கமாட்டார்.

**ஆதிக்க வெறி**

அன்றைய அமெரிக்கா வெள்ளையர்களது மனிதாபிமானமற்ற ஆதிக்க வெறிகொண்டதாக, கறுப்பினத்தவர்களை தாழ்வாக நடத்திய காலப்பகுதியாக காணப்பட்டிருந்தது.

ஆயினும், காலப்போக்கில் அமெரிக்கா குடியேற்ற வாசிகளின் நாடாக உலகின் பல்வேறு நாடுகளிலிருந்தும் வருவோருக்கு அடைக்கலம் தரும் நாடாகவும் மாறியிருந்தது.

20ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலிருந்து இந்தியர்களும் அமெரிக்காவில் குடியேறி, உயர்கல்வி மற்றும் வர்த்தக நடவடிக்கைகளில் தம்மை பெருமளவில் ஈடுபடுத்தலானார்கள்.

இன்றைய அமெரிக்காவில் இந்தியாவை பூர்வீகமாக கொண்டவர்கள் ஈடுபட்டிராத துறையே இல்லை என்று கூறுமளவுக்கு, அமெரிக்காவின் அனைத்துப் பகுதிகளிலும் இந்தியர்களின் செல்வாக்கு செறிந்திருக்கக் காணப்படுகின்றது.

**கல்பனா சௌலா**

விண்வெளி ஆய்வில்கூட இந்தியர்களது ஈடுபாடு அமெரிக்காவில் விரிவாகக் காணப்படுவதோடு, சுமார் 18 வருடங்களுக்கு முன்னர் இந்தியாவை பூர்வீகமாகக்கொண்ட கல்பனா சௌலா என்ற விண்வெளி வீராங்கனை தனது விண்வெளி பயணத்தின்போது ஏற்பட்ட விபத்தில், சக விண்வெளி வீரர்களுடன் உயிரிழந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதுதவிர, கணணித்துறையில் இந்தியர்களது ஆதிக்கம் அமெரிக்காவில் அபரிமிதமானதாகவே இருக்கின்றது.

சிலிக்கோன் பள்ளத்தாக்கு (Silicon Valley) கணணித் துறையைப் பொறுத்தவரை உலகப் பிரசித்தி பெற்றதாகும்.

சிலிக்கோன் பள்ளத்தாக்கில் இந்தியர்களும் , இஸ்ரேலியர்களுமே பெருஞ் செல்வாக்குச் செலுத்தி வருகின்றனர்.

அரசியல் மற்றும் சட்டத்துறையில் இந்தியர்களது செல்வாக்கு விரிவாக காணப்படுகின்றமைக்கு, அமெரிக்க உப ஜனாதிபதியாக தெரிவாகியுள்ள கமலா ஹரிஸ் சிறந்த உதாரணமாக இருக்கின்றார்.

**முக்கிய பொறுப்புகள்**

ஜனாதிபதி ஜோ பைடன் மற்றும் உப ஜனாதிபதி கமலா ஹரிஸ் நிர்வாகத்தில் அமெரிக்காவின் எதிர்கால முக்கிய பொறுப்புகளில் இந்தியர்களே நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதி ஜோ பைடன், உப ஜனாதிபதி கமலா ஹரஸ் ஆகியோரது நிர்வாகத்தில் இந்தியாவைப் பூர்வீகமாகக்கொண்ட பதினாறு பேர் முக்கிய பொறுப்புகளில் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் ஆறுபேர் ஆண்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதி ஜோ பைடன் உப ஜனாதிபதி கமலா ஹரிஸ் ஆகியோர் அமெரிக்காவின் முக்கிய பொறுப்புகளுக்குத் தெரிவு செய்துள்ள இந்தியர்களது விபரங்கள் வருமாறு:

இணை சட்டமா அதிபர்: வனிதா குப்தா. இவர் மனித உரிமைகள் செயல்பாட்டாளராகவும் சிவில் உரிமைகள் தலைமையதிகாரியாகவும் ஒபாமா நிர்வாகத்தில் பணியாற்றியவர்.

- வெள்ளை மாளிகை தேசிய பொருளாதார கவுன்ஸில் துணை இயக்குநர்: சமீரா பஸிலி.
- ஜனாதிபதி ஜோ பைடனின் பாரியார் முதல் பெண்மணி ஜில் பைடனின் கணணி செயல்பாட்டு இயக்குனர்: கரிமா வர்மா.
- ஜனாதிபதி அலுவலக ஆளணிகள் பிரதி இயக்குநர்: கௌதம் ராகவன்.
- ஜனாதிபதி ஜோ பைடனின் கொவிட் - 19 செயலணி துணை இயக்குநர்: டாக்டர் விவேக் மூர்த்தி.
- வெள்ளை மாளிகை துணை ஊடக செயலாளர்: சப்ரினா சிங்.
- பொதுமக்கள் பாதுகாப்பு, ஜனநாயகம், மனித உரிமைகள் இணைச்செயலாளர்: உஸ் ராசியா.

வெள்ளை மாளிகை கொவிட்-19 செயற்பாட்டு குழுவின் கொள்கை ஆலோசகர்: விதுர் சர்மா.

(02ஆம் பக்கம் பார்க்க)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



ஈழநாடு



## காணிப் பிரச்னைகள் தொடர்பில் கிளிநொச்சியில் கலந்துரையாடல்

*கிளிநொச்சி,ஜன.22*

வடக்கு மாகாணத்தில் நிலவும் காணிப் பிரச்னைகள் தொடர்பில் காணி ஆணையாளர் தலைமையில் நேற்று கிளிநொச்சியில் விசேட கலந்துரையாடல் இடம்பெற்றது.

கிளிநொச்சியில் உள்ள வடக்கு மாகாண முகாமைத்துவ பயிற்சி நிலைய கேட்போர் கூடத்தில் காணி ஆணையாளர் கீர்த்தி கமகே தலைமையில் 5 மாவட்டங்களின் அரசாங்க அதிபர்கள், 5 மாவட்டங்களிலும் உள்ள பிரதேச செயலாளர்கள், மாகாண காணி ஆணையாளர்கள் அனைவரும் ஒருமித்து, மாகாணத்திலுள்ள காணி அனுமதிப் பத்திரங்கள் வழங்கல் தொடர்பானதும், ஜனாதிபதி திட்டத்தின் கீழ் உள்ள ஒரு இலட்சம் விவசாய நிலங்கள் தொடர்பிலும் ஆராய்ந்துள்ளனர்.

இதன்போது மாவட்டங்களில் உள்ள காணி தொடர்பான பிரச்னைகள், அரசாங்க அதிபர்களால், காணி ஆணையாளருக்குத் தெரிவிக்கப்பட்டது.

ஒவ்வொரு மாகாணங்களில், ஒவ்வொரு மாவட்டங்களில் உள்ள காணிப் பிரச்னைகள் தொடர்பாகவும், காணி அனுமதிப் பத்திரம் வழங்கல் தொடர்பாகவும், அரசாங்க அதிபர்களுக்கும் பிரதேச செயலாளர்களுக்கும், காணி பிரச்னை தொடர்பான விளக்கங்கள், நடைமுறைகள் தொடர்பில் தெளிவுபடுத்தினர். (எ)




**மேடம்**
காலை நேரத்தில் செய்யும் காரியங்களில் கவனம். அருகில் உள்ளவர்களைஅனுசரித்துச் செல்வது நல்லது. எதிர்பார்த்த தகவல் தாமதப்படலாம்.

**இடபம்**
நினைத்த காரியம் நிறைவேறும். நீண்ட நாள் பிரச்சினை நல்ல முடிவிற்கு வரும். சுப விரயம் உண்டு. வீட்டுத் தேவைகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மிதுனம்**
சுபச்செய்திகள் வந்து சேரும். சொல்லைச் செயலாக்கிக் காட்டுவதில் இருந்த தடை அகலும். தொழில் வளர்ச்சி மேலோங்கும். மனஉறுதி அவசியம்.

**கடகம்**
ஆதரவு அதிகரிக்கும் நாள். தொழில் சம்பந்தமாக தொலைதூரத்திலிருந்து வரும் தகவல் மகிழ்ச்சி தரும். விவாகப் பேச்சுகள் நல்ல முடிவிற்கு வரும்.

**சிம்மம்**
போட்டிகளுக்கு மத்தியில் முன்னேற்றம் காணும் நாள். அரசியல் ஈடுபாடு அதிகரிக்கும். அக்கம் பக்கத்தில் உள்ளவர்களால் ஏற்பட்ட பகை மாறும்.

**கன்னி**
யோகங்கள் வந்து சேர யோசிக்க வேண்டிய நாள். காணாமலும் இருப்பது நல்லது. சேமிப்புகள் கரையக்கூடிய அளவிற்கு திடீர் செலவுகள் ஏற்படலாம்.

**துலாம்**
உத்தியோகத்தில் சலுகைகள் கிடைக்கும் நாள். நம்பி வந்தவர்களுக்கு உதவி செய்து மகிழ்வீர்கள். விழாக்களில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரலாம்.

**விருட்சிகம்**
முன்னேற்றத்தால் மகிழும் நாள். நண்பர்கள் நல்ல தகவலைத்தருவர். தொழில் வளர்ச்சி திருப்தி தரும். பணத்தேவைகள் உடனுக்குடன் பூர்த்தியாகும்.

**தனுசு**
பொன்னான செய்திகள் வந்துசேரும். பணவரவைக் கூட்டும். மங்கல நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள அழைப்புகள் வந்து சேரலாம்.

**மகரம்**
நிதியுதவி கிடைக்கும் நாள். பெரியவர்களின் ஆலோசனைகளை ஏற்று நடப்பது நல்லது. உடல் நலம் சீராக நண்பர்கள் உதவிசெய்வர்.

**கும்பம்**
விரோதிகள் விலகும். பயணத்தால் பலன் கிடைக்கும். தொழிலில் வரவேண்டியபாக்கிகள் வசூலாகும். அனுபவமிக்கவர்களைக் கலந்து ஆலோசிப்பது நல்லது.

**மீனம்**
பொருட்களை வாங்கி மகிழும் நாள். வீடு மாற்றம் பற்றிச் சிந்திப்பீர்கள். பணப்புழக்கம் அதிகரிக்கும். தொலைபேசி வழித்தகவல. உறுதுணை புரியும்.

# சிறுபான்மை இன மக்கள் வேதனையின் உச்சத்தில்

### *ரிஷாத் பதியுதீன் எம்.பி. விசனம்*

**கொழும்பு,ஜன.22**

**"இந்த ஆட்சியில் சிறுபான்மை இன மக்கள் வேதனையின் உச்சத்தில் வாழ்கின்றனர். அந்தளவுக்கு இந்த ஆட்சியில் அடக்குமுறைகள் தலைவிரித்தாடுகின்றன."**

- இவ்வாறு அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

இஸ்லாம் பற்றிய பூரண அறிவைப் புரிந்துகொள்ள, புனித அல்குர் ஆனுடன் சேர்த்து, அது அருளப்பட்ட பூரண பின்புலங்களை விளக்கும் ஹதீஸ்களையும் நல்லெண்ணத்துடன் அமைச்சர் உதய கம்மன்பில படிக்க வேண்டும் எனவும் அவர் கேட்டுக் கொண்டார்.

பாராளுமன்றத்தில் அண்மையில் பேசிய அமைச்சர் உதய கம்மன்பில, அல்குர்ஆனை தான் படித்தார் எனவும், 'இறந்தவர்களின் உடல்களை எரிப்பது ஹராம் என எங்கும் கூறப்படவில்லை எனவும் கூறியிருந்தார்.

அதற்குப் பதிலளிக்கும் வகையிலேயே பாராளுமன்ற உறுப் பினர் ரிஷாத் பதியுதீன் நேற்று சபையில் மேற்கண்டவாறு கருத்துத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-



அல்குர்ஆனை மாத்திரமல்ல, ஸ்சையும் சேர்த்துப் படியுங்கள். நல்லெண்ணத்துடன் இவை களைப் படித்தால் சரியான தெளிவைப் பெறுவீர்கள்.

நாட்டின் இறைமைக்கும், ஒற்றுமைக்கும், ஏன் சுதந்திரத்துக்கும் கூட பாடுபட்டது முஸ்லிம் சமூகம். எனினும்., கொரோனவால் பாதிக்கப்பட்ட முஸ்லிம்களின் ஜனாஸாக்களை அடக்க முடியாத துர்ப்பாக்கிய நிலையில் இருக்கின்றோம்.

எமது கண்ணுக்கு முன்னே சடலங்கள் பலவந்தமாக எரிக்கப்படுகின்றன. புகழ்பெற்ற நிபுணர்களும், இந்தத் துறையில் தேர்ச்சி பெற்ற மருத்துவ வல்லுநர்களும் ஜனாஸாக்களை அடக்க முடியும் எனச் சொன்ன பிறகும் இந்த அரசு, எதையும் காதில் வாங்கிக்கொள்ளவில்லை-என்றார்.

## 2 பாடசாலைகளுக்கு பூட்டு

*கொழும்பு, ஜன. 22*

அநுராதபுரம் கல்விவலயத்துக்கு உட்பட்ட நிராவிய பகுதியில் உள்ள இரண்டு பாடசாலைகள் காலவரையறையின்றி தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நிராவிய கிராமத்தில் 09 பேர் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியுள்ளதாக இனங்காணப்பட்ட நிலையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## 20 மில்லியன் ரூபா பணம், 1200 சி.சி. மோ.சைக்கிளுடன் ஒருவர் கைது!

*கொழும்பு, ஜன. 22*

களனி வனவாசல பகுதியில் வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கி, இரண்டு மகசின்கள், சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட 1,200 சிசி மோட்டார் சைக்கிள் மற்றும் 20 மில்லியன் ரூபா பணத்துடன் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இராணுவ புலனாய்வுப் பிரிவினால் வழங்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் விசேட அதிரடிப்படையினரால் இந்த சோதனை நடத்தப்பட்டது.

சந்தேக நபருக்கு இந்த பணம் எவ்வாறு வந்தது என்பதை கண்டறிய முடியவில்லையென பொலிஸார் தெரிவித்தனர். போதைப்பொருள் விற்பனையின் மூலம் பணம் பெறப்பட்டதா என்பது குறித்து விசாரணை நடந்து வருகிறது. கைதான 35 வயதுடைய சந்தேகநபரை 72 மணித்தியாலம் தடுப்பில் வைத்து விசாரிக்க அனுமதி பெறப்படவுள்ளதாக பொலிஸார் தெரி வித்தனர்.

# மன்னார் மாவட்டத்தில் 20 நாளில் 100 கொரோனா தொற்றாளர்கள்

*மன்னார், ஜன. 22*

மன்னார் மாவட்டத்தில் கடந்த வருடம் மார்ச் மாதம் முதல் தற்போது வரை 117 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ரி. வினோதன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மாவட்டத்தில் இந்த மாதம் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. கடந்த 20 நாள்களில் மாத்திரம் 100 கொரோனா தொற்றாளர்கள் மன்னார் மாவட்டத்தில் அடையாளம் காணப்பட்டுள்ளனர். தற்போது வரை 117 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கடந்த புதன்கிழமை கிடைத்த பி.சி.ஆர்.பரிசோதனை அறிக்கையின்படி மன்னார் மாவட்டத்தில் 30 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர்.பரிசோதனைகளின் அதிகமாக பரிசோதனைக்கான முடிவுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

எனவே, பொது மக்களையும், வியாபார நிலையங்களின் உரிமையாளர்களிடம் நாங்கள் கோரிக்கை ஒன்றை முன்வைக்கின்றோம்.

பொது மக்கள் தேவையற்ற விடயங்களுக்கு நகர பகுதிகளுக்குள் வருவதையும், தேவையற்ற விதத்தில் வியாபார நிலையங்களில் ஒன்று கூடுவதையும் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

முக்கியமாக சுகாதார நடைமுறைகளை பின்பற்ற வேண்டும். முகக்கவசம் அணிதல்,கை சுத்தத்தை கடைப்பிடித்தல், சமூக இடைவெளியை பேணுதல் மற்றும் சமூகப்பொறுப்புடன்நடந்துகொள்ளுதல் போன்ற விடயங்களை கடைப்பிடிக்க வேண்டும்.


எதிர்வரும் 2 முதல் 4 வாரங்களுக்கு மக்கள் குறித்த விடயங்களை பின்பற்றினால் குறித்த தொற்றில் அடைவை குறைத்து குறித்த தொற்றுச் சங்கிலியை எங்களினால் உடைக்க முடியும்.

இந்த மாதம் ஒரு கொரோனா மரணம் எமது மாவட்டத்தில் நிகழ்ந்துள்ளது. அதிகமானவர்கள் கொரோனா தொற்றுடன் வைத்தியசாலைக்கு வந்து கொரோனா தொற்று கண்டுபிடிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

எனவே, நோயின் தீவிரத் தன்மையை அனைவரும் புரிந்து கொண்டு மிகவும் பொறுப்புணர்வுடன் நடந்து கொண்டால் குறித்த நோயின் தாக்கத்தை எம்மால் கட்டுப்பாட்டில்வைத்துக்கொள்ள முடியும்-என்றார்.

# மாற்று அரசியல் கட்சியின் அவசியம் உணரப்பட்டுள்ளது

## ஐ.தே.க. தலைவர் ரணில் கூறுகிறார்



கொழும்பு,ஜன.22

**தற்போதைய சூழ்நிலையில் நாட்டுக்கு ஒரு மாற்று அரசியல் கட்சியொன்று அவசியம் என்பதை பலரும் உணர்ந்துள்ளனர்.**

**இந்நிலையில் ஐக்கிய தேசியக் கட்சியை புதிய உத்வேகத்துடன் மீளக்கட்டியெழுப்பி மாற்றுக்கட்சியின் இடத்தை நிரப்பிக் கொள்வதற்கு நாம் முயற்சிகளை எடுத்துள்ளோம்.**

எமது இந்தச் செயல்பாடுகளுக்கு அனைவரது ஒத்துழைப்பையும் வழங்குமாறு நாம் கோரிக்கை விடுக்கின்றோம் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர், முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஐ.தே.கவின் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று வியாழக்கிழமை ஐ.தே.க.வின் புதிய நிர்வாகிகள் அனைவரும் தமது பொறுப்புக்களை உத்தியோகபூர்வமாக ஏற்றுக் கொள்ளும் நிகழ்வு இடம் பெற்றது.

இதன்போது கட்சியின் தவிசாளராக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்த்தனவும், உப தலைவராக முன்னாள் கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசமும், பொதுச் செயலாளராக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பாலித ரங்கே பண்டாரவும், கட்சியின் பொருளாளராக ஏ.எஸ்.எம்.மிஸ்பாவும் பதவியேற்றனர்.

இதனைத் தொடர்ந்து கட்சியின் தலைவர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்காண்டவாறு குறிப்பிட்டார். (எ)

# மன்னாரில் மதத்தலங்களில் அனைவரும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுக!

## மாவட்ட அரசாங்க அதிபர் கோரிக்கை

மன்னார், ஜன. 22

மன்னார் மாவட்டத்தில் உள்ள மதஸ்தலங்களில் மக்கள் உரிய சுகாதார நடை முறைகளைப் பின்பற்றி மாவட்டத்தில் உள்ள மக்களை கொரோனா தொற்றில் இருந்து பாதுகாத்துக் கொள்ள அனைவரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமேல் தெரிவித்தார்.

மன்னார் மாவட்டத்தில் பொறுப்பாக உள்ள மதத் தலைவர்களுக்கான விசேட கலந்துரையாடல் நேற்று வியாழக்கிழமை காலை மாவட்ட செயலகத்தில் இடம் பெற்றது.

இந்த விசேட கலந்துரையாடலில் மதத்தலைவர்கள், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் உட்பட அழைக்கப்பட்ட திணைக்கள அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

கலந்துரையாடலைத் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையிலேயே அவர் அவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மன்னார் மாவட்டத்தில் தற்போது அதிகரித்துச் செல்லும் கொரோனா தொற்று நிலைமையை கவனத்தில் கொண்டு மன்னார் மாவட்டத்தில் பொறுப்பாக உள்ள மதத் தலைவர்களை அழைத்து விசேட கலந்துரையாடலை நடத்தி இருந்தோம்.

குறிப்பாக மாவட்டத்தில் உள்ள சகல மதஸ்தலங்களிலும் மத கடமையில் ஈடுபடும் போது மக்கள் சுகாதார நடைமுறைகளை பின்பற்ற வேண்டும் என்று கண்டிப்பான அறிவித்தலை வழங்கி உள்ளோம்.

மதஸ்தலங்களில் மக்கள் அதிகமாக ஒன்று கூடும்போது கொரோனா தொற்று அதிகரிப்பதற்கு சந்தர்ப்பங்கள் அதிகமாக உள்ளது. எனவே ஒவ்வொரு மதங்களிலும் அவர்களுடைய மதஸ்தலங்களில் பின்பற்றப்படும் முறைகள் தொடர்பாகவும் கலந்துரையாடலை மேற்கொண்டுள்ளோம்.

தற்போதைய கொரோனா சூழ்நிலையில் எவற்றை நாங்கள் தவிர்த்துக் கொள்ளவேண்டும் என்ற விடயங்களையும் மத தலைவர்களுக்கு தெரியப்படுத்தி உள்ளோம்.

அதற்கான அறிவித்தல்களை மதத் தலைவர்கள் தமது மதத் தலங்களில் மக்களுக்கு தெரியப் படுத்த உள்ளனர். மதத் தலைவர்கள் தமது பூரண ஒத்துழைப்பையும் எமக்கு வழங்குவதாக தெரிவித்துள்ளனர்.

மாவட்டத்தில் நாங்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து ஒத்துழைப்பு வழங்கும் பட்சத்தில் கொரோனா தொற்றில் இருந்து எமது மக்களை பாதுகாத்துக் கொள்ள முடியும்-என்றார்.

# கண்டியில் 2,694 பேருக்கு கொரோனா

கொழும்பு, ஜன. 22

கண்டி மாவட்டத்தில் நேற்று மாத்திரம் 54 கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அத்துடன், 2020 ஒக்டோபர் 4 ஆம் திகதி முதல் நேற்று முன் தினம் வரை கண்டி மாவட்டத்தில் 2 ஆயிரத்து 694 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்றியுள்ளது.

அதேவேளை, இரத்தினபுரி மாவட்டத்தில் நேற்றுமுன் தினம் மாத்திரம் 19 தொற்றாளர்கள் அடையாளம் காணப் பட்டுள்ளனர். 2ஆவது அலை மூலம் இம்மாவட்டத்தில் இது வரை ஆயிரத்து 272 பேருக்கு வைரஸ் பரவியுள்ளது.

# இந்திய மீனவர்கள் நால்வர் மரணம்: தமிழ்க் கூட்டமைப்பு கடும் கண்டனம்

யாழ்ப்பாணம், ஜன. 22

இலங்கைக் கடற்படையினரின் டோறா மோதியதால் உயிரிழந்த இந்திய மீனவர்கள் நால்வரினதும் உயிரிழப்புக்கும் வன்மையான கண்டனத்தைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

இலங்கைக் கடல் எல்லைப் பரப்பில் கடந்த திங்கட்கிழமை இரவு ஒரு ட்ரோலர் படகில் மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர்கள் நால்வர் உயிரிழந்தமை தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் அதன் பேச்சாளரும் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் கண்டனத்தைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கைக் கடற்பரப்புக்குள் எல்லை தாண்டும் மீனவர்களை எல்லையிலேயே தடுக்குமாறும், ஊடுருவும் மீனவர்களைச் சட்டத்தின் முன் நிறுத்துமாறும் நாம் தொடர்ந்தும் கோரும் அதேநேரம் வாழ்வியலை நாடும் அப்பாவி மீனவர்களின் உயிர் பறிக்கும் செயலை ஏற்கமாட்டோம் என்பதையும் தெரிவித்துக்கொள் கின்றோம்.

கடந்த 18ஆம் திகதி இரவு காணாமல்போன இந்திய மீனவர்களின் படகுடன் இலங்கைக் கடற்படையினரின் டோறா மோதியிருக்கலாம் என்ற சந்தேகமும், காணாமல்போன இந்திய மீனவர் படகில் இருந்த மீனவர்கள் நால்வருக்கும் என்ன நடந்தது என்ற அச்சமும் 18ஆம் திகதி இரவு 11 மணி முதலே நிலவிய வேளை நேற்று மாலை இருவரினது சடலங்களும், இன்று மற்றைய இருவரினது சடலங்களும் இலங்கைக் கடற்படையினரால் மீட்கப்பட்டன.

இந்தச் சம்பவத்தில் சடலங்களாக மீட்கப்பட்ட நால்வருக்கும் எமது அஞ்சலியைத் தெரிவிக்கும் அதேநேரம் இந்தச் சம்பவம் தொடர்பில் உறுதியான தகவலைக் கடற்படையினர் விரைவில் கண்டறிய வேண்டும் எனவும் கேட்டுக் கொள்கின்றோம்.

இதேநேரம் உயிரைக் காக்க இந்தியாவுக்குத் தப்பியோடிய யாழ்ப்பாணம் இளைஞர் ஒருவரும் தனது வாழ்வாதாரத்தைக் கருதி இந்திய உறவுகளுடன் தொழிலுக்கு வந்த வேளை பரிதாபமாக உயிரிழந்தமை எமது உறவுகளின் அவலத்தை எடுத்தியம்புகின்றது.

உறவுகளை இழந்து தவிக்கும் தாய்த் தமிழகச் சொந்தங்களுக்கும் எமது மீனவரின் குடும்பத்தினருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்-என்றார்.

# ஷானி உட்பட மூவரின் விளக்கமறியல் நீடிப்பு

கொழும்பு, ஜன. 22

போலியான சாட்சியங்களை தயாரப்படுத்தி நீதிமன்றத்தை தவறாக வழிநடத்த முயன்ற குற்றச்சாட்டில் கைதான குற்றப் புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகர உள்ளிட்ட மூவரின் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

கம்பஹா பதில் நீதவான் மஹேஸ் ஹேரத் முன்னிலையில் நேற்று வழக்கு விசாரணைக்கு எடுத்துகொள்ளப்பட்டபோதே, இவர்கள் மூவரையும் அடுத்த மாதம் 03 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது.

# பணி இடைநீக்கம் செய்யப்பட்ட நீதிபதி கிஹான் பிலப்பிட்டிய மீண்டும் பணியில்

கொழும்பு, ஜன. 22

பணி இடைநீக்கம் செய்யப்பட்ட மேல்நீதிமன்ற நீதிபதி கிஹான் பிலப்பிட்டியவை மீண்டும் பணியில் அமர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர் தொடர்பில் நடத்தப்பட்ட விசாரணைகளுக்கு அமையவே அவர் மீண்டும் சேவையில் அமர்த்தப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அவரை மீண்டும் பணியில் அமர்த்துவது தொடர்பாக நீதிசேவை ஆணைக்குழு விரைவில் கடிதம் மூலம் அறிவிக்கவுள்ளது.

தற்போது கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள ரஞ்சன் ராமநாயக்கவுடன் சர்ச்சைக்குரிய தொலைபேசி உரையாடலை மேற்கொண்டார் எனத் தெரிவித்து மேல்நீதிமன்ற நீதிபதி கிஹான் பிலப்பிட்டிய கடந்த ஆண்டு ஜனவரி 21 ஆம் திகதி பணி இடைநீக்கம் செய்யப்பட்டார்.அவர் குறித்து நீதிச் சேவை ஆணைக்குழுவின் பரிந்துரைக்கு அமையவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அதன்படி, பணி இடைநீக்கம் செய்யப்பட்ட மேல்நீதிமன்ற நீதிபதியை கைது செய்ய நீதிமன்றத்தில் பிடியாணை பெற்றுக்கொள்ளுமாறு சட்டமா அதிபர் கொழும்பு குற்றப் பிரிவுக்கு ஆலோசனை வழங்கியிருந்தார்.

ஆனால், நுகேகொடை மேலதிக நீதவான் இது குறித்து தெரிவிக்கும்போது, சத்திய கடதாசி மூலம் விசாரணை அதிகாரியிடம் சாட்சியங்களைப் பெற்றுக் கொண்ட பின்னரே மேல்நீதிமன்ற நீதிபதியை கைது செய்ய பிடியாணை பிறப்பிக்க முடியும் என கூறினார்.

கடந்த 2020 ஆம் ஆண்டு பெப்ரவரி 19 ஆம் திகதி பணி இடைநீக்கம் செய்யப்பட்ட மேல்நீதிமன்ற நீதிபதி கிஹான் பிலப்பிட்டிய, தான் கைது செய்யப்படுவதைத் தடுக்கும் வகையில் இடைக்கால தடை உத்தரவைக் பிறப்பிக்குமாறு கோரி மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் ரிட் மனு ஒன்றை தாக்கல் செய்திருந்தார்.

இதன்போது நீதிமன்ற உத்தரவு இல்லாமல் நீதிபதி கிஹான் பிலப்பிட்டியவை கைது செய்ய முடியாது என மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டது.

அதன்படி நீதிபதி கிஹான் பிலபிட்டியவுக்கு எதிரான வழக்கு விசாரணையை கடந்த 2020 ஆம் ஆண்டு ஜூன் 8 ஆம் திகதி நுகேகொடை நீதிமன்றம் இடைநிறுத்தியதுடன், இடைக் கால தடை உத்தரவையும் பிறப் பித்தது.

# நேற்று காலை 8.30 மணிக்குள் 20 விமானங்கள் இலங்கைக்கு

## 542 பேர் வெளிநாடுகளுக்கு பயணம்

கொழும்பு,ஜன.22

வணிக விமானங்களுக்காக கட்டுநாயக்கா விமான நிலையம் திறக்கப்பட்டதையடுத்து நேற்றுக் காலை 8.30 மணிவரையான காலப் பகுதிக்குள் மட்டும் 20 விமானங்கள் வருகை தந்துள்ளன.

இந்த விமானங்கள் மூலம் 213 பேர் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.இதனடிப்படையில் சவுதி அரேபியாவிலிருந்து 76 பேரும், ஓமானிலிருந்து 50 பேரும், தென் கொரியாவிலிருந்து 13 பேரும் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர். இதேவேளை 12 விமானங்கள் மூலம் 542 பேர் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளனர். (எ)

# இலங்கை குறித்து ஜெனிவாவில் இம்முறை காட்டமான அறிக்கை

## ஐ.நா. மனித உரிமை ஆணையர் வெளியிடுவார்



**கொழும்பு, ஜன. 22**

**ஜெனிவாவில் எதிர்வரும் மாதம் இடம்பெறவுள்ள ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் அமர்வில் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பச்லெட் இலங்கை குறித்து ஒரு காட்டமான அறிக்கையை வெளியிடுவார் என ஆங்கில ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.**

ஜெனிவா அமர்வுக்கு முன்னதாக இந்த அறிக்கையின் நகல் வெளியிடப்படும் எனவும் அறிக்கையின் நகல் பகிரங்கப்படுத்தப்படுவதற்கு முன்னர் அதன் பதில் உரிமைக்காக இலங்கை அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது என்றும் அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையின் நகலை இலங்கை பெற்றிருப்பதை இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய உறுதிப்படுத்தியுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், நேற்றைய நிலவரப்படி இந்த அறிக்கைக்கு இலங்கை தனது பதிலை இன்னும் சமர்ப்பிக்கவில்லை என்று பாலசூரிய தெரிவித்தார் எனவும் கூறப்படுகிறது.

ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 46ஆவது அமர்வின் நிகழ்ச்சி நிரலில் பெப்ரவரி 22 முதல் மார்ச் 19 வரை நடைபெறவுள்ள அமர்வுகளில் இலங்கை உள்ளது.

இந்த அமர்வின்போது, இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை உறுதி செய்வதில் அரசாங்கத்தின் தோல்வி குறித்து மிச்சேல் பச்லெட் விமர்சனங்களை எழுப்புவார் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## மஹிந்தானந்தவுக்கு எதிரான விசாரணை ஒத்திவைப்பு

கொழும்பு, ஜன. 22

அமைச்சர் மஹிந்தானந்த அலுத்கமகேவுக்கு எதிராக சட்டமா அதிபரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழங்கின் மேலதிக சாட்சி விசாரணை எதிர்வரும் பெப்ரவரி மாதம் 3 ஆம் திகதி இடம்பெறவுள்ளதாக கொழும்பு மேல் நீதிமன்ற அறிவித்துள்ளது.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே, நீதவான் ஆதித்ய கடபெதியே இந்த உத்தரவை பிறப்பித்தார்.

இலங்கை சுதந்திர தொழிலாளர் காங்கிரஸ் என்ற தொழிற்சங்கத்துக்குரிய 39 இலட்சம் ரூபா பணத்தை தவறாக பயன்படுத்தினார் என்ற குற்றச்சாட்டின் கீழ் அமைச்சர் மஹிந்தானந்தவுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## வவுனியாவில் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கல்

வவுனியா, ஜன. 22

வவுனியா, ஓமந்தை பிரிவிலுள்ள வசதியற்ற மாணவர்கள் 52 பேருக்கு சமூக ஆர்வலரினால் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளது.

வசதியற்ற பாடசாலை செல்லும் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று வவுனியா புதிய சின்னக்குளம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் பாடசாலையின் அதிபர் து.ஜெனானந்தசிவம் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது 24 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கக்கப்பட்டன.

கடந்த வாரமும் ஓமந்தைப் பிரதேசத்தில் பாடசாலை செல்லும் 28 மாணவர்களுக்கு சமூக ஆர்வலர் சுரேஸின் நிதிப்பங்களிப்பில் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.



## வவுனியா வர்த்தகர்களுக்கு நேற்றும் பி.சி.ஆர். சோதனை

வவுனியா, ஜன. 22

வவுனியா கந்தசாமி கோவில் வீதி மற்றும் அதனை அண்டிய பகுதிகளைச் சேர்ந்த வியாபார நிலையங்களின் உரிமையாளர்கள் மற்றும் ஊழியர்களுக்கு அன்ரிஜென் பரிசோதனைக்கான மாதிரிகள் நேற்று பெறப்பட்டன.

வவுனியா நகரப் பகுதியில் எழுமாற்றாக நடத்தப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் 55 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்ட நிலையில் வவுனியா நகரின் ஒரு பகுதி கடந்த சில நாட்களாக முற்றாக முடக்கப்பட்டுள்ளது.

அந்த பகுதிகளைச் சேர்ந்த அனைத்து வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள் மற்றும் ஊழியர்கள் பி.சி.ஆர் பரிசோதனை செய்யப்பட்டு அதன் முடிவுகளும் கிடைக்கப்பெற்றன.

அடுத்த வாரமளவில் நகரத்தில் முடக்கப்பட்ட பகுதிகளைத் திறப்பதற்கான நடவடிக்கைகளை சுகாதாரப் பிரிவினர் முன்னெடுத்துள்ளனர்.

இதுவரை பி.சி.ஆர். பரிசோதனையை முன்னெடுக்காத ஊழியர்கள் மற்றும் வர்த்தகர்கள் என 250 பேருக்கு வவுனியா நகரசபை மண்டபத்தில் வைத்து அன்ரிஜென் பரிசோதனை முதற்கட்டமாக நேற்று முன்னெடுக்கப்பட்டது.

அன்ரிஜென் பரிசோதனையில் தொற்று உறுதிப்படுத்தப்படுபவர்கள் தனிமைப்படுத்தப்பட்டு பி.சி.ஆர் பரிசோதனை முன்னெடுப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்படவுள்ளன. (அ)

## மாணவனுக்கு கொரோனா; 12 பேர் தனிமைப்படுத்தல்

கொழும்பு, ஜன. 22

கண்டியில் உள்ள பிரபல பாடசாலையில் 12ஆம் தரத்தில் கல்விப்பயிலும் மாணவனுக்கு கொரோனா வைரஸ் தொற்றியிருப்பது உறுதியாகியுள்ளது.

அந்த மாணவன், கொரோனாத் தொற்றுடன் சில நாட்களாக பாடசாலைக்கு சென்றுள்ளார். இதனால் அந்த மாணவனுடன் நெருங்கிப் பழகிய 11 மாணவர்களும் ஆசிரியரும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். (அ)

## முத்துராஜவல சூழல் பாதிப்பு குறித்து ஆராய நிபுணர் குழு

கொழும்பு, ஜன. 22

முத்துராஜவல சுற்றுச்சூழலுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து ஆய்வு செய்வதற்காக குழுவொன்றை நியமிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கான ஆலோசனைகள் அமைச்சின் செயலாளர், விசேட வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்கவுக்கு வழங்கப்பட்டுள்ளதாக சுற்றாடல் துறை அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

சுற்றாடல் அமைச்சு, வனப்பாதுகாப்பு, வனஜீவராசிகள் திணைக்களம், சுரங்கப் பணியகம் ஆகியவற்றின் பிரதிநிதிகளை கொண்டு இந்த குழு நியமிக்கப்படவுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.




## ரயில்வே துறையின் பங்களிப்பு அதிகரிப்பு

கொழும்பு, ஜன. 22

எரிபொருளைக் கொண்டு செல்வதற்காக கடந்த வருடம் ரயில்வேதுறை 28 சதவீத பங்களிப்புக்களை வழங்கியிருப்பதாக அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

இது தற்சமயம் 32 சதவீதம் வரை அதிகரித்துள்ளதோடு, இதனை 40 சதவீதம் வரை அதிகரிப்பது இலக்காகும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

சுற்றாடல் மாசடைதல், வாகன நெரிசல், கூடுதல் செலவினம் போன்றவற்றை இதன் மூலம் கட்டுப்படுத்த முடியும் என்றும் அமைச்சர் கூறினார்

## ஊழியருக்கு கொரோனா; தபால் அலுவலகம் பூட்டு

கொழும்பு, ஜன. 22

தெஹிவளை தபால் அலுவலக ஊழியர் ஒருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளமை உறுதியான நிலையில் நேற்று முதல் தபாலகம் தற்காலிகமாக பூட்டப்பட்டுள்ளது.

கரந்தெனிய பகுதியை சேர்ந்த அந்தப் பெண் ஊழியர் இறுதியாக கடந்த திங்கட்கிழமை சேவைக்கு வந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சுகயீனம் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் அவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து, அவர் சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளார். அவர் கடமையாற்றி தபால் அலுவலகம் தற்காலிகமாக பூட்டப்பட்டுள்ளது.

# கொரோனா வைரஸை வைத்து அரசியல் செய்கிறது எதிரணி



## பிரதமர் மஹிந்த குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன. 22

**எதிர்க்கட்சியின் சிலர் கொவிட் பிரச்னையில் தொங்கிக் கொண்டு அதிலேனும் மீளெழுவதற்கு முயற்சித்து வருகின்றனர். நண்பர்களே, எங்களுக்கு வைரஸின் மூலம் அரசியல் செய்வதற்கான தேவையில்லை. நாட்டு மக்களின் நலன் குறித்து செயற்படுவதே எமது தேவையாக உள்ளது என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.**

பன்னிப்பிட்டிய, மாகும்புர பிரதேசத்தில் நிறுவப்பட்ட யோ பிராண்ட் (Yoo Brand) பாதணி தொழிற்சாலையை திறந்து வைக்கும் நிகழ்வில் காணொளி தொழில்நுட்பம் ஊடாக கலந்துகொண்டு உரையாற்றிய பிரதமர் மேலும் கூறியவை வருமாறு:-

எமது நாட்டின் எதிர்காலம் குறித்து இலங்கையர்களான நம் அனைவருக்கும் எதிர்பார்ப்புகள் உள்ளன. அனைவரும் காண்பது ஒரே கனவு. அது நம் நாடு அபிவிருத்தியடைந்த நாடாகும் கனவாகும்.

நாம் உலகின் மத்தியில் பிற நாடுகளைவிட மானுட குணாதிசயங்களினால் சிறந்த தேசமாகும். வரலாற்றில் எமது நாடு பல்வேறு துறைகளில் மதிப்பு வாய்ந்ததாக விளங்குகின்றது.அண்மைக் காலத்தில் வெவ்வேறு அரசாங்கத்தின் கீழ் நாட்டின் குறிக்கோள் மாற்றமடைந்தது. எனினும், நாட்டு மக்களதும், நாட்டினதும் குறிக்கோள் தொடர்பில் நாம் எப்போதும் பொறுப்புடன் பணியாற்றினோம்.

இன்று கொவிட் நெருக்கடி முழு உலகையும் ஆட்கொண்டுள்ளது. பிற நாடுகளில் போன்றே நமது நாட்டிலும் அது மக்களின் வாழ்க்கையில் பாரிய தாக்கம் செலுத்தியுள்ளது. வைத்தியர்கள், சுகாதார ஊழியர்கள், பாதுகாப்புத் துறை, அரச ஊழியர்கள் போன்றே, தனியார் துறையை சேர்ந்த நீங்களும், நாட்டின் அனைத்து பொதுமக்களும் முறையான சுகாதார வழிகாட்டல்களை பின்பற்றி இந்த சவாலை வெற்றி கொள்ள பாடுபடுகின்றனர். அரசாங்கம் என்ற ரீதியில் நாம் அதற்கு தேவையான தலையீட்டை செய்துள்ளோம்.

எதிர்க்கட்சியின் சிலர் கொவிட் பிரச்னையில் தொங்கிக் கொண்டு அதிலேனும் மீளெழுவதற்கு முயற்சித்து வருகின்றனர். நண்பர்களே, எங்களுக்கு வைரஸின் மூலம் அரசியல் செய்வதற்கான தேவையில்லை. நாட்டு மக்களின் நலன் குறித்து செயற்படுவதே எமது தேவையாக உள்ளது.

நாட்டில் ஏதேனும் ஒரு சவால் மிகுந்த சூழல் நிலவும் சந்தர்ப்பங்களிலேயே பொதுமக்கள் எமக்கு மக்கள் ஆணையை வழங்கியுள்ளனர். அது பொதுமக்கள் எம் மீது கொண்டுள்ள நம்பிக்கையே ஆகும். நாட்டின் பாதுகாப்பாக இருப்பினும், தொற்று நெருக்கடியாக இருக்கட்டும், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அரசாங்கம் என்ற ரீதியில் நாம் நமது கடமையை நிறைவேற்றுவோம். அதேபோன்று நாம் அந்த நம்பிக்கையை எப்போதும் காப்பாற்றியுள்ளோம் - என்றார். (அ)

## போதைப்பொருள் வர்த்தகர் கைது

கொழும்பு, ஜன. 22

போதைப்பொருள் வர்த்தகர் எனச் சந்தேகிக்கப்படும் சந்தேகநபர் ஒருவர் களனியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட் டுள்ள நபரிடமிருந்து 2.75 கோடி ரூபா பணமும் கைத்துப்பாக்கி ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது.

பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின்போதே இவர் கைது செய்யப்பட்டார்.

## சுகாதார விதிகளை மீறிய 18 பேர் கைது

கொழும்பு, ஜன. 22

முகக் கவசம் அணியத் தவறிய மற்றும் சமூக இடைவெளியை பின்பற்றத் தவறியமைக்காக மேல் மாகாணத்துக்கு வெளியே 18 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான குற்றச்சாட்டுக்களுக்காக நாடு முழுவதும் கடந்த ஒக்ரோபர் 31 ஆம் திகதி முதல் இதுவரையான காலப் பகுதியில் 2,680 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

# குருந்தூர் மலைப்பகுதி ஆய்வில் வெளிப்படைத்தன்மை அவசியம்!

## செல்வம் அடைக்கலநாதன் வலியுறுத்து



கொழும்பு, ஜன. 22

குருந்தூர் மலைப்பகுதியில் சிவன் கோவில் அமைந்துள்ள நிலையில் அங்கு மறைமுகமாக தொல்லியல் ஆய்வுகள் நடைபெறுகின்றன. இதனை ஏற்கமுடியாது. ஆய்வுகளில் வெளிப்படைத்தன்மை அவசியம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன் தினம் நடைபெற்ற சபை ஒத்திவைப்புவேளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு,

வன்னி மாவட்டத்தில் அரசின் கெடுபிடிகள் அதிகரித்துள்ளன. குறிப்பாக முல்லைத்தீவு மாவட்டம் இறுக்கப்பட்டுள்ளது. குருந்தூர் மலைப்பகுதியில் சிவன் கோவில் உள்ளது. 1933 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட வர்த்தமானியில் 'குருந்தூர் மலை' எனதான் விளிக்கப்பட்டுள்ளது. ஆரம்பம் முதல் தமிழ் பெயர் இருக்கும் நிலையில் தற்போது எதற்கு அவசர அவசரமாக அகழ்வாய்வு நடக்கின்றது?

கடந்த காலங்களில் தொல்லியல் ஆய்வு என்ற போர்வையில் தமிழர்களின் பூர்வீக இடங்கள் ஆக்கிரமிக்கப்பட்டன. திடீரென விகாரைகள் முளைத்தன. எனவே, குருந்தூர் மலை விவகாரத்திலும் எமது மக்களுக்கு சந்தேகம் இருக்கின்றது. மக்கள் வழிபடுவதற்கு தடை இருக்கக்கூடாது என நீதிமன்ற தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் பொங்கல் வைத்து வழிபட சென்ற மக்கள் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளனர். இது விடயத்தில் நீதிமன்றத் தீர்ப்பு மீறப்பட்டுள்ளது.

அகழ்வாய்வு ஏன் மறைமுகமாக செய்யப்படுகின்றது? வெளிப்படைத் தன்மை அவசியம். பேராதனை பல்கலைக்கழகத்தில் இருந்துவந்து செய்யும் நிலையில் யாழ். பல்கலைக்கழக பேராசிரியர்களையும், மாணவர்களையும் இதில் இணைத்துக்கொள்ளுமாறு நாம் கேட்டிருந்தோம். இது சம்பந்தமாக எமது தலைவர் சம்பந்தன், இராஜாங்க அமைச்சர் விதுலவுடன் பேச்சு நடத்தினர். இணைத்துக் கொள்வதற்கும் இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது. பேச்சளவில் மட்டும் அல்லாமல் உறுதிமொழி நடைமுறைக்கு வரவேண்டும். வெளிப்படைதன்மையுடன் ஆராய்ச்சிகள் நடைபெறவேண்டும்- என்றார். (அ)



# கட்டுப்பாடு இல்லாமல் பரவியுள்ள கொரோனா

## குணமடைந்த தயாசிறி கருத்து

கொழும்பு, ஜன. 22

கொரோனா வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்டிருந்த இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர பூரண குணமடைந்து நேற்று முன் தினம் வீடு திரும்பியுள்ளார்.

இந்த நிலையில், கொரோனா வைரஸின் பாதிப்பு குறித்து அவர் தனது உத்தியோகபூர்வ முகப்புத்தகத்தில் பதிவிட்டுள்ளார்.

அந்தப் பதிவில், 'நாடு முழுவதும் வேகமாக பரவி வரும் இந்த கொரோனா வைரஸ் அனைவரையும் அழித்து வருகிறது. எனவே உங்களுக்கு காய்ச்சல், இருமல், சுவையின்மை போன்ற அறிகுறிகள் இருந்தால், நீங்கள் முதலில் உங்கள் குடும்ப உறுப்பினர்களை விட்டு விலகி சுயதனிமைப்படுத்திக்கொள்ள வேண்டும்.

மேலும் உங்கள் அருகிலுள்ள பொதுச் சுகாதார ஆய்வாளருக்கு தெரிவிக்கவேண்டும். பொறுப்பாக இருப்பதன் மூலம் இந்த நோயை நாம் சற்றுத்தொலைவில் பெற முடிகிறது.

இந்த நேரத்தில், கொரோனா நோய் நாடு முழுவதும் கட்டுப்பாடு இல்லாமல் பரவியுள்ளது என்பதை நாங்கள் அறிவோம். இந்த நிலையில், அனைத்து நோயாளிகளையும் சுகாதார மையங்களுக்கு அனுப்புவதற்கான சூழ்நிலை அரசாங்கத்திற்கு இல்லை.

ஏனெனில் மட்டுப்படுத்தப்பட்ட மருத்துவ ஊழியர்கள் மற்றும் ஒரு பெரிய தொகையை அரசாங்கம் செலவழிக்க முடியாது. எனவே அறிகுறிகள் தோன்றினால், சம்பந்தப்பட்ட பகுதியில் உள்ள பொதுச் சுகாதார ஆய்வாளரால் வீடுகளை சரிபார்க்கும்படி நான் அரசாங்கத்தையும் சுகாதாரத் துறையையும் கேட்டுக்கொள்கிறேன். வீட்டிலேயே சுகாதாரம் அவசியம்.

இதேபோல், எதிர்காலத்தில் அறுபதாயிரத்துக்கும் மேற்பட்ட இலங்கையர்களை அழைத்துவர அரசாங்கம் எதிர்பார்க்கும் தருணத்தில், அவர்கள் அனைவருக்கும் ஆரோக்கியமான மையங்களை வழங்குவதும் எளிதான காரியமல்ல.

இதற்கு ஒரு தீர்வாக, அவர்கள் நான்கு நாட்களுக்கு தங்கள் சொந்த வீட்டில் வேறு அறை மற்றும் ஏனைய கழிப்பறை வசதிகளையும் வைத்திருக்கவேண்டும் என்று நான் பரிந்துரைக்கிறேன். இதைத் தவிர வேறு வழியில்லை என்பது நோயால் பாதிக்கப்பட்ட ஒருவர் என்ற எனது உணர்வு.

ஆகவே, சரியான சிகிச்சை முறையைக் கண்டுபிடிக்கும் வரை நாங்கள் பாதுகாப்பாக இருக்கவேண்டும் என்பதை மக்களுக்கு நினைவூட்டுகிறேன்.

சமூக தூரத்தை பாதுகாப்போம். முகத்தை மூடி மறைப்போம். குடிமக்களின் பொறுப்பை நிறைவேற்றுவோம்' என அவர் தெரிவித்துள்ளார்.

## இலங்கை ரூபாவின் பெறுமதி படுவீழ்ச்சி

கொழும்பு, ஜன. 22

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடைந்துள்ளது. அமெரிக்க டொலர் ஒன்றின் விற்பனை விலை 198.26 ரூபாவாக பதிவாகியுள்ளது.

அத்துடன் அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு விலை 192.85 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது. இது இலங்கை வரலாற்றில் இலங்கை ரூபா அதிக வீழ்ச்சியடைந்த முதலாவது சந்தர்ப்பமாகும்.

## குண்டுதாரியின் தந்தை கைது!

கொழும்பு, ஜன. 22

கடந்த 2019 ஏப்ரல் 21ஆம் திகதி நடத்தப்பட்ட தற்கொலை தாக்குதல் மூலம் கொச்சிக்கடை, புனித அந்தோனியார் தேவாலயத்தை தாக்கிய சந்தேக நபரின் தந்தை கைது செய்யப்பட்டுள்ளார்.

தற்கொலைதாரியின் தந்தையைக் கைது செய்து அடுத்த மாதம் 2 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதம நீதிவான் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

எதிர்வரும் 2 ஆம் திகதி திறந்த நீதிமன்றத்தில் அந்த நபரை ஆஜர்படுத்த சிறைச்சாலைக் கண்காணிப்பாளருக்கும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

# பைடனின் மின்னல்வேக உத்தரவுகள்!



அமெரிக்க அதிபராக புதிதாகப் பதவியேற்றுள்ள ஜனநாயக கட்சியின் ஜோ பைடன், முதல் நாளிலேயே மின்னல் வேகத்தில் ஆணைகளில் கையெழுத்திட்டார்.

இதற்குமுன் எந்த அமெரிக்க அதிபரும் பதவியேற்ற முதல் நாளில் கையெழுத்திட்ட ஆணைகளின் எண்ணிக்கையைவிட பைடன் கையெழுத்திட்ட ஆணைகளின் எண்ணிக்கை அதிகம்.

பதவியேற்ற முதல் நாளில் பைடன் கையெழுத்திட்ட நிர்வாக ஆணைகள் 15. அதிபரின் குறிப்புகள் என்று பொருள்படும் பிரசிடென்ஷியல் மெமோரக்கள் -2.

பதவியேற்ற முதல் நாளில் ட்ரம்ப் 8 உத்தரவுகளில் கையெழுத்திட்டார். ஒபாமா 9 உத்தரவுகளில் கையெழுத்திட்டார். ஜோர்ஜ் டபிள்யூ புஷ் 2 உத்தரவுகளிலும், கிளின்ரன் 3 உத்தரவுகளிலும் கையெழுத்திட்டனர்.

அதெல்லாம் இருக்கட்டும், அவர் கையெழுத்திட்ட முதல் உத்தரவுகளில் முக்கியமானவை என்ன?

**பாரிஸ் பருவநிலை ஒப்பந்தம் - முக கவசம்**

பாரிஸ் பருவ நிலை ஒப்பந்தத்தில் மீண்டும் அமெரிக்காவை சேர்ப்பதற்கான நடைமுறையைத் தொடக்குவதற்கான ஒரு நிர்வாக உத்தரவைப் பிறப்பித்தார் பைடன். பருவநிலை மாற்றம் புதிய அமெரிக்க நிர்வாகத்தின் முன்னுரிமைகளில் ஒன்று என்று கூறப்பட்டுள்ளது.

சர்ச்சைக்குரிய கீஸ்டோன் எக்ஸ் எல் குழாய் அமைப்புத் திட்டத்துக்கு அளிக்கப்பட்ட அதிபர் ஒப்புதலை பைடன் திரும்பப் பெற்றார். இந்த திட்டத்துக்கு எதிராக சுற்றுச்சூழல் ஆர்வலர்களும், பூர்வகுடி அமெரிக்கர்களும் 10 ஆண்டுகளாகப் போராடி வருகிறார்கள். இன்று வெள்ளிக்கிழமை கனடா பிரதமர் ஜஸ்டின் ரூடோவுடன் பைடன் தொலைபேசியில் பேசும்போது இந்த விவகாரத்தை விவாதிப்பார் என்று வெள்ளை மாளிகையின் புதிய ஊடகச் செயலாளர் ஜென் சாகி தெரிவித்தார்.

அமெரிக்க மக்கள் கொரோனா பரவலைத் தடுப்பதற்காக முகக் கவசம் அணிவது அவசியம் என்பது தொடர்பாகவும் அவர் உத்தரவு பிறப்பித்தார்.

**முஸ்லிம்கள், மெக்சிக்கோ, இனப் பாகுபாடு**

சில முஸ்லிம் நாடுகள் மீது ட்ரம்ப் விதித்த பயணத் தடைகளை பைடன் ரத்து செய்து உத்தரவிட்டார்.

மெக்சிக்கோ - அமெரிக்கா இடையே தடுப்புச் சுவர் கட்டும் பணிக்கு நிதி அளிக்கும் வகையில் ட்ரம்ப் பிறப்பித்த அவசரகால உத்தரவை பைடன் திரும்பப் பெற்றார்.

இனப்பாகுபாடு, பாலின சமத்துவம் தொடர்பான வேறு சில உத்தரவுகளையும் பைடன் பிறப்பித்தார்.

**உலக சுகாதார நிறுவனம்**

உலக சுகாதார நிறுவனத்தில் இருந்து அமெரிக்கா வெளியேறும் என்று கூறிய டொனால்ட் ட்ரம்ப் நிர்வாகம் அதற்கான நடைமுறைகளையும் தொடங்கியது. இப்போது அந்த நடைமுறைகள் நிறுத்திவைக்கப்படும். இதனை ஐ.நா. தலைமைச் செயலாளர் அன்டோனியா குட்டரஸ் வரவேற்றுள்ளார்.

கொரோனா தடுப்பு நடவடிக்கைகளை ஒருங்கிணைக்க ஒரு அலுவலகம் அமைக்கப்படும்.

ட்ரம்ப் காலத்தின் கொள்கைகளில் மாற்றங்கள் கொண்டுவரும் விடயத்தில் தாமதம் காட்டப் போவதில்லை என்பதும், கொரோனா உலகத் தொற்று காரணமாக அமெரிக்கா வரலாற்றுச் சிக்கலில் இருக்கும் நிலையில் வேகமாக முடிவெடுக்கவேண்டியதாக புதிய அதிபர் பதவி இருக்கும் என்பதும் இந்த அதிவேக உத்தரவுகள் சொல்லும் செய்திகள்.

அமெரிக்க அரசில் நிர்வாக உத்தரவுகள் எனப்படும் எக்சிகியூட்டிவ் ஓடர்கள் என்பதன் பொருள் என்ன? நிர்வாக உத்தரவுகளை ஒரு அதிபர் பிறப்பிக்க முடியும். அவற்றுக்கு நாடாளுமன்ற ஒப்புதல் பெறவேண்டியதில்லை. ஆனால், ஒரு அதிபர் இப்படி பிறப்பித்த உத்தரவு ஒன்றினை பாராளுமன்றம் விவாதித்து நிராகரிக்க வழி உண்டு.

பாராளுமன்ற நிராகரிப்பை தமது வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தி அதிபர் ரத்து செய்யவும் முடியும்.

**முதல் கபினட் உறுப்பினரை உறுதி செய்தது செனட்**

கபினட் உறுப்பினர்கள் நியமன விஷயத்தில் பைடன் நிர்வாகம் பரிந்துரைத்த பெயர்களில் ஒன்றுக்கு செனட் ஒப்புதல் அளித்துள்ளது. ஏவ்ரில் ஹெய்ன்ஸ் தேசிய உளவு நிறுவனத்தின் இயக்குநராக நியமிக்கப்பட்டதை செனட் உறுதி செய்துள்ளது. 51 வயதான இவர்தான் இந்தப் பதவிக்கு வரும் முதல் பெண்.

இவரது நியமனத்துக்கு ஆதரவாக 84 செனட் உறுப்பினர்களும், எதிராக 10 உறுப்பினர்களும் வாக்களித்தனர். "உளவுத் தகவல்கள் எவ்வளவு கடினமானவையாக இருந்தாலும், அசௌகரியமான தகவல்களாக இருந்தாலும் அவற்றைத் தருவதே தமது பதவி என்று பார்ப்பதாக" அவர் நாடாளுமன்றத்தில் குறிப்பிட்டார்.

ஏற்கனவே ஒபாமா நிர்வாகத்தில் தேசியப் பாதுகாப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளார் இவர்.

ஆனால், இவரது அரசுப் பணிகளை விட அதற்கு முந்திய இவரது வாழ்க்கை சுவாரஸ்யமானது.

சட்டக் கல்லூரியில் படிப்பதற்கு முன்பு ஜப்பானில் ஜூடோ கற்று அதில் பிறவுண் பட்டி வாங்கியவர் இவர். ஒரு பழைய விமானத்தை மீளக் கட்டமைத்து, அதை மீண்டும் சிதைத்தவர். சிக்காக்கோ பல்கலைக்கழகத்தில் கோட்பாட்டு இயற்பியல் படித்தவர். கார் இயந்திரங்களை பழுதுபார்த்தவர். தனியாக ஒரு தேநீர் கடை நடத்தியவர். பாலுறவு நூல்களை விற்று பிரபலம் அடைந்த ஒரு புத்தகக் கடையை நடத்தியவர்.

கபினட்டுக்கு பரிந்துரைக்கப்பட்ட பிறர் பெயர்களுக்கும் செனட் விரைவாக ஒப்புதல் தரவேண்டும் என்று பைடன் நிர்வாகம் விரும்புகிறது. ஆனால், முதல் நாளில் அதற்கான ஒப்புதல் வருவதற்கு வாய்ப்பில்லை.

**பைடன் நிர்வாகத்தின் முதல் செய்தியாளர் சந்திப்பு**

புதிய நிர்வாகத்தின் ஊடகச் செயலராக ஜென் சாகி என்பவர் நியமிக்கப்பட்டிருக்கிறார். அவர்தான் முதல் செய்தியாளர் சந்திப்பை நடத்தினார். சுமார் 50 நிமிடங்கள் இந்த சந்திப்பு நீடித்தது.

"அமெரிக்க மக்களின் நம்பிக்கையை வளர்த்தெடுப்பதுதான் பைடன் நிர்வாகத்தின் முக்கிய நோக்கமாக இருக்கும்" என்றார் ஜென் சாகி.

"என்னை இந்தப் பதவியை ஏற்றுக் கொள்ளுமாறு அதிபர் பைடன் என்னிடம் கேட்ட போது, பத்திரிகையாளர்கள் சந்திப்பில் உண்மையையும், வெளிப்படைத் தன்மையையும் கொண்டு வருவது எவ்வளவு முக்கியமானது என விவாதித்தோம்" என்றார் ஜென் சாகி.

அவர் பேசி முடித்த பிறகு, பத்திரிகையாளர்களுக்கான கேள்வி நேரம் தொடங்கியது.

நீங்கள் எதற்கு முக்கியத்துவம் கொடுப்பீர்கள்? அதிபர் ஜோ பைடன் மதிப்பை உயர்த்துவதற்கா? அல்லது வெளிப்படையாக உண்மையை பகிர்வதற்கா? என அசோசியேட்டட் பிரஸ் சார்பில் முதல் கேள்வி கேட்கப்பட்டது.

அதற்கு பதில் அளித்த ஜென் சாகி,

"சுதந்திரமான பத்திரிகைகளின் பங்களிப்பு மீது எனக்கு மிகுந்த மரியாதை உண்டு. நாம் இருவரும் முரண்படும் நேரங்கள் வரலாம், ஆனால் நம் இருதரப்புக்கும், அமெரிக்க மக்களிடம் துல்லியமான உண்மையைக் கொண்டு செல்லவேண்டும் என்கிற ஒரு பொது நோக்கம் இருக்கிறது" என்றார்.

அரசின் செயல்பாடுகளில் வெளிப்படைத்தன்மையையும், உண்மையையும் கொண்டு வர தானும் அதிபர் பைடனுடன் பணியாற்றப்போவதாக குறிப்பிட்டார் ஜென்.

பொதுவாக அமெரிக்க ஊடகச் செயலர்கள், பத்திரிகையாளர்களுடன் நல்லுறவில் இருந்ததில்லை.

"ட்ரம்பின் பதவியேற்புக்குதான் வரலாறு காணாத அளவில் அதிக அளவில் பார்வையாளர்கள் கலந்து கொண்டார்கள்" என ட்ரம்ப் ஆட்சியின் முதல் வெள்ளை மாளிகை செய்தித் தொடர்பாளர் சியன் ஸ்பைசர் கூறி சர்ச்சையானது நினைவு கூரத்தக்கது.

**கருக்கலைப்பு குறித்த கேள்விக்கு மழுப்பிய ஊடகச் செயலர்**

மெக்ஸிக்கோ நகர கொள்கை மற்றும் ஹைட் சட்டத் திருத்தம் ஆகிய கருக்கலைப்பு நிதி ஆதரவு குறித்த இரு முக்கிய சட்டங்களைப் பற்றிக் கேள்வி எழுப்பினார் ஒரு பத்திரிகையாளர்.

கருக்கலைப்புக்கு அமெரிக்க மத்திய அரசின் நிதியை வழங்காமல் தடுக்கும் சட்டம் தான் இந்த ஹைட் சட்டத்திருத்தம்.




இந்த சட்டத் திருத்தத்தை பைடன், முன்பு ஆதரித்து வந்தார். இந்த 2020 அமெரிக்க அதிபர் தேர்தல் பிரசாரத்தின் போது அவர் தன் நிலையை மாற்றிக் கொண்டார். அனைத்து மருத்துவம் சார்ந்த விஷயங்களும் ஒருவரின் உரிமை என்று தான் நம்புவதாகக் கூறினார் பைடன்.

இது குறித்து கேள்வி எழுப்பிய போது "அதிபர் பைடன் தேவாலயத்துக்கு தொடர்ந்து செல்லும் ஒரு கத்தோலிக்க கிறிஸ்தவர். இதற்கு மேல் இது குறித்துக் கூற என்னிடம் எதுவும் இல்லை" என்றார் ஜென்.

ஜோ பைடன் ஒற்றுமை எனக் கூறுவது உண்மை என்றால், முந்தைய அதிபர் ட்ரம்பின் மீது நிறைவேற்றப்பட்டிருக்கும் கண்டனத் தீர்மானத்தை கைவிட்டிருக்க வேண்டுமே? எனக் கேள்வி எழுப்பப்பட்டது.

"அமெரிக்க மக்களைப் போலவே, அமெரிக்க செனட் சபையும் பல வேலைகளை ஒரே நேரத்தில் செய்யும். செனட் அமெரிக்க மக்கள் தொடர்பான பணிகளைச் செய்யும் அதே நேரத்தில், தன்னுடைய அரசியலமைப்புப் பணிகளையும் செய்யும்" எனக் கூறினார் ஜென் சாகி.

அமெரிக்காவை ஒன்றிணைக்க வேண்டுமென்றால், அமெரிக்கா எதிர்கொள்ளும் பிரச்னைகளுக்கு தீர்வு காண வேண்டும் என்பது தான் பைடனின் பார்வை. அதிபர் பைடனின் கவனம் அரசியலில் இல்லை, அமெரிக்க மக்களின் பிரச்னைகளைத் தீர்ப்பதிலும், வேலையில் இறங்குவதிலும் தான் அவர் கவனம் இருக்கிறது எனக் குறிப்பிட்டார் அவர்.

ஏற்கனவே ஒரு வாரத்துக்கு முன், பிரதிநிதிகள் அவை, ட்ரம்புக்கு எதிரான கண்டனத் தீர்மானத்தை நிறைவேற்றி விட்டது. இன்னும் செனட் அவை தன் விசாரணையைத் தொடங்கவில்லை.

ஓர் அமெரிக்க அதிபர், தன் பதவிக் காலத்துக்குப் பிறகும் கண்டனத் தீர்மானத்தை எதிர்கொள்வது, இதுவே முதல் முறை எனவும் கூறப்படுகிறது.

■

# சுதந்திர இலங்கையின் நான்காவது அரசியலமைப்பு!

நா.யோகேந்திரநாதன்

இலங்கை சுதந்திரம் பெற்று 72 ஆண்டுகளே ஆகிவிட்டநிலையிலும் இந்த நாடு மூன்று அரசியலமைப்புக் களைச் சந்தித்து விட்டது. சோல்பரி அரசியலமைப்பின் அடிப்படையில் இலங்கைக்குச் சுதந்திரம் வழங்கப் பட்டு 24 ஆண்டுகளின் பின்பு இரண்டாவது அரசிய லமைப்பு நிறைவேற்றப்பட்டது. அதையடுத்து 6 வருடங்களின் பின்பு அடுத்த அரசியலமைப்பு அமு லுக்கு வந்தது. ஒவ்வொரு புதிய அரசியலமைப்புகளும் அமுலுக்கு வரும் போது நாட்டின் பொதுவான அரசியல் திசை மார்க்கத்தில் பாரிய மாற்றங்கள் ஏற்பட் டன என்பதை மறுக்கமுடியாது. நாட்டின் தேசிய அரசி யல், பொருளாதாரம், சமூக உறவுகள், சர்வதேச உறவு கள் போன்ற முக்கிய விடயங்களில் ஏற்கனவே கையாண்ட கொள்கைகளிலிருந்து வெளியேறி புதிய கொள்கைகளுடன் பயணித்தமையை அவதானிக்க முடியும்.

அதேவேளை, ஒவ்வொரு புதிய அரசியலமைப்பு உருவாக்கப்படும்போதும் சிறுபான்மை மக்களுக்குக் குறிப்பாக தமிழ் மக்களுக்குப் பாதகமான அம்சங்கள் புதிது புதிதாக சேர்க்கப்பட்டன என்ற அம்சம் இரண்டு அரசியலமைப்புகளிலுமே காணப்படுகின்றது.

இலங்கை சுதந்திரம் பெறுவதற்கு முன்பு பிரித்தானிய அரசின் ஆதிக்கத்தில் இருந்தபோதே கோல்புறூக் அரசியலமைப்பு, மக்கலம் சீர்திருத்தம், மனிங் சீர்திருத்தம், டொனமூர் அரசமைப்புச் சீர்திருத்தம், சோல்பரி அரசியலமைப்பு என்பன அமுலுக்குக் கொண்டு வரப்பட்டன.

கோல்புறூக் அரசியல் சீர்திருத்தம் மூலம் கண்டி இராச்சியம், கோட்டை இராச்சியம், யாழ்ப்பாண இராச்சியம் என தனித்தனி அரசுகளாக ஐரோப்பியர் வருகையின் முன் விளங்கிய ஆட்சிப் பிரதேசங்கள் 1833ல் ஒரே நாடாக்கப்பட்டன. அதில் தமிழ் மக்கள் தங்கள் சுயாட்சிக்கான நிலப்பகுதியின் தனித்துவத்தை இழந்தனர். அதுமட்டுமின்றி இலங்கை 9 மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டபோது தமிழர் பிரதேசம் வடக்கு, கிழக்கு என இரண்டு மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டன. அதன் காரணமாகத் தமிழ் மக்கள் தங்கள் ஆட்புல ஒருமையை இழந்தனர். அதாவது சோல்புறூக் அரசியல் சீர்திருத்தம் தமிழர்களுக்குப் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தியமையைக் கண்டு கொள்ள முடியும். அதே வேளையில் சட்டநிர்வாக சபைக்கு இனவாரியான பிரதிநிதித்துவம் என வரையறுக்கப்பட்டிருந்தது.

1910 இல் கொண்டு வரப்பட்ட மக்கலம் சீர்திருத்தம் மூலமோ, 1920இல் கொண்டுவரப்பட்ட மனிங் சீர்திருத்தம் மூலமோ இனவாரியான பிரதிநிதித்துவத்தில் மாற்றம் எதுவும் ஏற்படுத்தப்படவில்லை.

1924இல் முன்வைக்கப்பட்ட டொனமூர் அரசியல் சீர்திருத்தத்தின் மூலம் சிங்கள அரசியல் தலைவர்களின் அழுத்தங்களின் பேரில் இனவாரியான பிரதிநித்துவம் ஒழிக்கப்பட்டு பிரதேச ரீதியான பிரதிநிதித்துவம் முன்வைக்கப்பட்டது. அத்துடன் இதுகாலவரை கல்வி கற்ற, செல்வாக்கு உள்ள மேல் மட்டத்தினருக்கே வாக்குரிமை என்ற நிலையும் மாற்றப்பட்டு சர்வஜன வாக்கெடுப்பு அமுலுக்கு வந்தது. பிரதேச வாரியான பிரதிநிதித்துவத்தையும், சர்வஜன வாக்கெடுப்பையும் தமிழர் தரப்புப் பலமாக எதிர்த்தபோதிலும் அது பலனளிக்கவில்லை. சேர் பொன்.இராமநாதன் லண்டன் வரை சென்று வாதாடியும் எவ்வித பலனும் கிட்டவில்லை.

1931இல் டொனமூர் அரசியலமைப்பில் இடம் பெற்ற சட்ட சபைத் தேர்தலில் 38 சிங்களவரும், 3 தமிழரும், 2 பிரித்தானியரும் இந்தியர்கள் 2 பேரும், 1 முஸ்லிமும் தெரிவு செய்யப்பட்டனர். அதைத் தொடர்ந்து அமைக்கப்பட்ட அமைச்சரவை தனிச் சிங்கள அமைச்சரவையாக அமைக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு சுதந்திரம் பெறும்முன்னர் அமுலுக்கு வந்த அரசியலமைப்புகள் தமிழருக்குப் பாதகமான விளைவுகளை ஏற்படுத்திய நிலையில் இலங்கைக்குச் சுதந்திரம் வழங்கும் பொருட்டு புதிய அரசியலமைப்பை உருவாக்கவென ஆங்கில அரசால் சோல்பரி ஆணைக்குழு அமைக்கப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன.

இவ்விசாரணைகளின் போது தமிழர் தரப்பின் சார்பில் ஜீ.ஜீ.பொன்னம்பலம் அவர்களால் ஐம்பதுக்கு ஐம்பது கோரிக்கை முன் வைக்கப்பட்டது. அதாவது அரசாங்க சபையில் சிங்களவர்களுக்கு 50 வீதமும் தமிழர் உட்பட ஏனைய சிறுபான்மையினருக்கு 50 வீதமும் பிரதிநிதித்துவம் கோரப்பட்டது.

சோல்பரி மீண்டும் இனவாரியான பிரதி நிதித்துவம் கொண்டு வரப்படுவதை விரும்பவில்லை. அவர் பிரித்தானிய வெஸ்ற் மினிஸ்ரர் வகையிலான ஒரு அரசியலமைப்பையே எதிர்பார்த்தார்.

அவ்வேளையில் கொழும்பு பல்கலைக்கழக உபவேந்தர் ஐவன் ஜெனிஸ் அவர்களால் தயாரிக்கப்பட்டு டி.எஸ்.சேனாயக்கவால் முன்வைக்கப்பட்ட அரசியலமைப்பு நகலை அவர் சில திருத்தங்களுடன் ஏற்றுக்கொண்டார். அதில் சிறுபான்மை மக்களின் பாதுகாப்புக்கென 29(2) சரத்து உட்பட நாலு அம்சங்கள் சேர்க்கப்பட்டன. டி.எஸ்.சேனநாயக்க பலவித தந்திரங்களையும் மேற்கொண்டு ஜீ.ஜீ.பொன்னம்பலம் லண்டனில் இருந்த வேளையில் அரசாங்க சபையில் 90 வீதமான ஆதரவைப் பெற்று அதை 1945இல் நிறைவேற்றினார்.

1948இல் ஆண்டு இலங்கைக்குச் சுதந்திரம் வழங்கப்பட்டபோது இலங்கையின் அரசியலமைப்பாக சோல்பரி அரசியலமைப்பு அங்கீகரிக்கப்பட்டது.

சோல்பரி அரசியலமைப்பில் சிறுபான்மையினரின் பாதுகாப்புக்கென நாலு சிறப்பம்சங்கள் சேர்க்கப்பட்டிருந்த போதிலும் சுதந்திர இலங்கையில் அவற்றால் சிறுபான்மை மக்களைப் பாதுகாக்க முடியவில்லை.

இலங்கை சுதந்திரம் பெற்ற அதே ஆண்டிலேயே 18ஆவது இலக்கச் சட்டத்தின் மூலம் மலையகத் தமிழ் மக்களின் வாக்குரிமை பறிக்கப்பட்டது. 1949இல் இந்திய பாகிஸ்தான் குடியுரிமைச் சட்டத்தின் மூலமும், 1952இல் மேற்கொள்ளப்பட்ட நேரு - கொத்தலாவல ஒப்பந்தம் மூலமும் 6 இலட்சம் மலையகத் தமிழர்கள் நாடற்றவர்கள் என்பது உறுதி செய்யப்பட்டது. அதன் காரணமாக 1952இல் இடம்பெற்ற பொதுத் தேர்தலில் தமிழர்களின் பலம் 13இல் இருந்து 6 ஆகக் குறைக்கப்பட்டது. 1948 தொடக்கம் 1956 வரை ஆட்சியில் இருந்த ஐ.தே.கட்சி அரசாங்கம் ஓர் ஏகாதிபத்திய சார்பு ஆட்சியாகவும் தங்கு நிலை பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்டும் அமைந்திருந்தது. பிரித்தானிய நிறுவனங்களுக்குச் சொந்தமான தேயிலை, இறப்பர் தோட்டங்களின் உற்பத்திகளின் ஏற்றுமதி நாட்டின் பிரதான வருவாயாக அமைந்திருந்தது. விவசாய உற்பத்திப் பெருக்கம் என்ற பேரில் பல விவசாயக் குடியேற்றத் திட்டங்கள் அமைக்கப்பட்டு ஏராளமானோர் குடியேற்றப்பட்டனர்.

இலங்கைப் பாராளுமன்றத்தில் நிறைவேறும் எந்தவொரு சட்டமும் பிரித்தானிய மகாராணியின் பிரதிநிதியான மகாதேசாதிபதியால் ஒப்புக்கொள்ளப்பட்டாலே அது செல்லுபடியாகும் நிலையே இருந்தது. அது மட்டுமின்றி முப்படைகளின் தளபதியாகவும் மகாதேசாதிபதியே விளங்கினார். நீதித்துறையிலும் இலங்கை நீதிமன்றங்களின் தீர்ப்பை லண்டன் பிரிவு கவுன்ஸில் நிராகரிக்கும் அதிகாரங்களை கொண்டிருந்தது.

அதாவது, இலங்கை சுதந்திரம் பெற்றதாகக் கூறப்பட் டாலும்கூட அது அரசியல், பாதுகாப்பு, பொருளாதார ரீதியாக பிரித்தானிய அதிகார வட்டத்துக்குள்ளேயே கட்டுப்பட்டிருந்தது.

இந்த நிலையில் 1951ல் ஐக்கிய தேசியக் கட்சியை விட்டு வெளியேறிய எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்க ஏகாதிபத்திய சார்பு ஐக்கிய தேசியக் கட்சிக்கும் தொழிலாளி, விவசாயிகளின் உரிமைகளை முதன்மைப்படுத்திய இடசாரிகளுக்கும் இடைப்பட்ட கொள்கைகளைக் கொண்டு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை உருவாக்கினார். இலங்கையின் தேசிய அபிலாஷைகளை முன்வைத்து உருவான இக்கட்சி சிங்கள மக்கள் மத்தியில் வேகமாக வளர்ச்சி பெற்றது. அவர் 1956ல் சிங்களத்தை 24 மணி நேரத்தில் அரச கரும மொழியாக்குவது என்ற கோஷத்தை முன்வைத்துப் போட்டியிட்டு பெரும் வெற்றி பெற்று ஆட்சியமைத்தார்.

அவர் ஆட்சிக்கு வந்ததுமே சிங்களத்தை அரச கரும மொழியாக்கும் சட்டத்தைத் தமிழர் தரப்பினரும் இடதுசாரிகளினதும் பலத்த எதிர்ப்பின் மத்தியிலும் நிறைவேற்றினார். சோல்பரி அரசமைப்பு விதிகளால் ஒட்டுமொத்தத் தமிழ் பேசும் மக்களுக்குமே இழைக்கப்பட்ட இந்த அநீதியைத் தடுத்து நிறுத்த முடியவில்லை.

ஸ்ரீமாவோ ஆட்சியில் கொண்டுவரப்பட்ட 1972இன் புதிய அரசியலமைப்பைப் பிரபல இடதுசாரித் தலைவர்களில் ஒருவரான கொல்வின் ஆர்.டி.சில்வாவே தயாரித்தபோதும், இது தமிழ் மக்கள் மீதான ஒடுக்குமுறைகளை வலுப்படுத்த வகை செய்தது.

இந்த அரசியலமைப்பு மூலம் பௌத்த மதத்துக்கு முதன்மை இடம் வழங்கப்பட்டதன் மூலம் பௌத்தம் ஏனைய மதங்கள் மீது மேலாதிக்கம் செலுத்தச் சட்டபூர்வமான அங்கீகாரம் வழங்கப்பட்டது. மேலும், சோல்பரி அரசியலமைப்பு மூலம் சிறுபான்மை மக்களின் பாதுகாப்புக்கென ஏற்படுத்தப்பட்ட 29(2) சரத்து செனற் சபை, சிறுபான்மை இனப் பிரதிநிதிகளை, நியமன உறுப்பினர்களாக நியமித்தல் போன்ற விடயங்கள் நீக்கப்பட்டன. எவ்வாறு முன்னைய அரசியலமைப்புகள் தமிழ் மக்கள் மீதான ஒடுக்குமுறைகளை மேற்கொள்ள இடமளித்தனவோ அவ்வாறே இந்த அரசியலமைப்பு தமிழ் மக்களுக்குப் பாதகமான பல அம்சங்களைக் கொண்டிருந்தது.

1972ஆம் ஆண்டு அரசியலமைப்பு இலங்கையை ஒரு சுயதேவைப்பூர்த்தியுள்ள ஒரு சுதந்திரமான தேசமாக சர்வதேச மட்டத்தில் தலைநிமிர்ந்து நிற்குமளவுக்கு சிறப்பான தேசிய அம்சங்களைக் கொண்டிருந்தபோதும் தமிழ் மக்கள் மீதான ஒடுக்குமுறைகளுக்கும் இடமளித்தது என்பதை மறுக்கமுடியாது.

1978ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட அரசியலமைப்பு இலங்கையின் சுதந்திர, சுயாதீன பொருளாதாரக் கொள்கை, ஜனநாயகத்தை செழுமைப்படுத்தும் வகையில் பாராளுமன்றத்துக்கு இருந்த அதிகாரங்கள் என அனைத்தையுமே சிதைத்துவிட்டது. திறந்த பொருளாதாரக் கொள்கை மூலம் நாடு ஒரு தங்குநிலைப் பொருளாதாரத்துக்குள் தள்ளப்பட்டது. மேலும் நடுநிலைக் கொள்கை தளர்வுற்று மேற்குலக ஏகாதிபத்திய சார்பு வலுப்பெற ஆரம்பித்தது. அதுமட்டுமின்றி 6ஆவது திருத்தச் சட்டம் உட்படப் பல விதங்களில் தமிழ் மக்கள் மீதான ஒடுக்குமுறை கொடிய முறையில் விரிவுபடுத்தப்பட்டு உள்நாட்டுப் போர் இடம்பெறும் நிலையும் தோற்றம் பெற்றது. அதுமட்டுமின்றி நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை கொண்டு வரப்பட்டதன் மூலம் பாராளுமன்றத்தின் அதிகாரம் கேள்விக்குள்ளாக்கப்பட்டுவிட்டது.

42 வருடங்களை எட்டிப் பிடித்துள்ள இந்த அரசியலமைப்புச் சட்டம் 6 நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிகளையும் 20 திருத்தங்களையும் கண்டு விட்டது. பொருளாதார துறையில், ஆடை உற்பத்தி, சுற்றுலாதுறை, மீன் ஏற்றுமதி போன்ற அந்நிய நாடுகளை நம்பியுள்ள தங்கு நிலைப் பொருளாதாரத்தைக் கொண்டுள்ளது. இவற்றின் காரணமாக பொருளாதார நெருக்கடி கடன்சுமை என்பன பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. அது மட்டுமின்றி நாடு வல்லரசுகளின் உலக மேலாதிக்கப் போட்டியின் ஆடுகளமாக மாறிவிட்டது. 20ஆவது சட்டத்தின் மூலம் தனி நபர் சர்வாதிகாரத்துக்கு வழி வகுக்கப்பட்டதுடன் இராணுவ மயப்பட்ட ஆட்சியாக மாறி வருகின்றது.

இந்த நிலையில்தான் சுதந்திர இலங்கையின் நான்காவது அரசியலமைப்பு பற்றிய முன்னெடுப்புகள் ஆரம்பமாகியுள்ளன. தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததுமுதல் ஒரு தனிநபர் சர்வாதிகாரத்தை வலுப்படுத்தும் வகையிலும், நிர்வாகத்தை இராணுவ மயப்படுத்துவதிலும் படிப்படியான நகர்வுகள் மேற்கொள்ளப்பட்டதுடன் அந்த முயற்சியில் 20ஆவது திருத்தச் சட்டமும் கணிசமான சாதக அம்சங்களைக் கொண்டுள்ளது. இந்த அரசாங்கத்தைப் பதவிக்குக் கொண்டு வருவதில் சிங்களக் கடும் போக்குவாதிகளும் இனவாத பிரசாரங்களும் பிரதான பங்கை வகித்தன.

எனவே பயங்கரவாத எதிர்ப்பு, தீவிரவாத ஒழிப்பு என்ற பேரில் தமிழ், முஸ்லிம் மக்களுக்கு எதிரான ஒடுக்குமுறை நடவடிக்கைகள் மேலும் வலுப்படுத்தப்படும் அறிகுறிகள் தென்படுகின்றன. மாகாண சபை முறை ஒழிக்கப்படவேண்டுமென்ற கோரிக்கையும் வலுப்பெற்று வருகின்றது. சர்வதேச அரசியலில் அமெரிக்காவையோ இந்தியாவையோ பகைக்காமல் அணிசேராக் கொள்கை என்ற பேரில் சீனாவுடனான உறவுகள் மேலும் வலுப்படுத்தப்படும்.

எனவே சுதந்திர இலங்கையின் நான்காவது அரசியலமைப்பு சிறுபான்மை மக்களின் உரிமைகள், தொழிலாளர்கள் உரிமைகள் போன்ற ஜனநாயக விழுமியங்களுக்கெதிரான கட்டுப்பாடற்ற ஒடுக்குமுறைகளை மேற்கொள்ளும் வகையில் ஒரு இராணுவ மயப்பட்ட ஆட்சியதிகாரத்தை நிறுவும் வகையிலேயே அமையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. ஒருபுறம் சீன சார்பு நிலைப்பாட்டை எடுத்தபோதும் இன்னொருபுறம் அந்நிய முதலீகளைக் கவர்வது என்ற பெயரில் மேற்குலகின் பொருளாதார வலைக்குள் சிக்குப்படும் சாத்தியமும் உண்டு. அதன் காரணமாக இலங்கை வல்லரசுகள் மோதும் களமாகவும் மாறலாம்.

எனினும் புதிய அரசியலமைப்பை வரைவதற்கான நிபுணர் குழு பல்வேறு தரப்பினரிடமும் ஆலோசனைகளைக் கோரிவரும் நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தனது ஆலோசனைகளைச் சமர்ப்பித்துள்ளது. அதுதொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள பொதுப் பாதுகாப்பு அமைச்சர் சரத்வீரசேகர அது நாட்டைப் பிரிவினைக்கு இட்டுச் செல்வதால் அது நிராகரிக்கப்படும் எனத் தெரிவித்துள்ளார். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழ் மக்கள் கூட்டணி ஆகிய தரப்பினரின் ஆலோசனைகளுக்கும் இப்படியான பதிலே கிடைக்கும் என்பதில் சந்தேகமில்லை.

எப்படியிருப்பினும் ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட அரசியலமைப்புக்களைப் போலவே நான்காவது அரசியலமைப்பும் தமிழ், முஸ்லிம் மக்களை இரண்டாந்தரப் பிரஜைகளாக்கி ஒடுக்குமுறைகளைத் தொடரும் வகையிலேயே அமையும் என்பதில் சந்தேகமில்லை.

# மக்களை ஏமாற்றி ஆட்சிக்கு வந்து நாட்டை நாசமாக்கும் ஆளும் தரப்பு

## சரத் பொன்சேகா சாடல்



கொழும்பு,ஜன.22

**எந்தவொரு சர்வதேச நாடும் எமது நாட்டின் சுயாதீனத்தில் தலையிட அனுமதிக்க முடியாது என அரசாங்கம் வீரவசனங்களைப் பேசிக்கொண்டு கொழும்பு துறைமுகத்தை வெளிநாட்டுக்குக் கொடுத்து மண்டியிடும் நிலைமை உருவாகப்போகின்றது என ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.**

மக்களை ஏமாற்றி ஆட்சிக்கு வந்தவர்கள் இன்று நாட்டையும் நாசமாக்கி வருகின்றனர் என்று குற்றம்சாட்டியுள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் அரசாங்கத்தின் வர்த்தமானி அறிவித்தல்களை நடைமுறைப்படுத்தாமை தொடர்பில் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க கொண்டுவந்த சபை ஒத்திவைப்பு பிரேரணையில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

அரசாங்கம் நாளுக்கு நாள் வர்த்தமானி அறிவித்தல்களை விடுத்தாலும் மக்கள் நாளுக்கு நாள் பட்டினியை எதிர்கொண்டு வருகின்றனர். கடந்த காலத்தில் எமது ஆட்சியில் அத்தியாவசிய பொருள்களின் விலை குறித்து மேடைகளில் பேசினர்.

ஆனால்இன்று நாட்டில்விலைவாசி எப்படியுள்ளது என்பதை மக்கள் நன்கு அறிந்திருப்பார்கள். கற்பனை கதைகளைக் கூறி மக்களை ஏமாற்றி ஆட்சிக்கு வந்தவர்கள் இன்று எவ்வாறு மக்களை நடத்துகின்றனர் என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொடுப்பதாக கூறினர். தமது ஆட்சி மலரும் வரையில் எவரும் திருமணம் செய்துகொள்ள வேண்டாம், நாம் ஆட்சிக்கு வந்ததும் புதுமணத் தம்பதியினருக்கு வீடும், 25 இலட்சம் ரூபா பணமும் தருவதாகக் கூறினார்கள். இந்த கதைகளை நம்பியே மக்கள் ஏமாந்துள்ளனர்.


அரச வளங்களை வெளிநாடுகளுக்கு விற்க மாட்டோம் எனக் கூறி ஆட்சிக்கு வந்தவர்கள், கொழும்பு துறைமுக கிழக்கு முனையத்தை விற்கவே மாட்டோம் என்று கூறியவர்கள் வாக்குறுதியளித்த அனைத்துமே இன்று பொய்யாகி விட்டது. கொழும்பு துறைமுகத்தை நாம் இந்தியாவுக்கு கொடுத்தால் அடுத்த 25 வருடங்களுக்கு எம்மால் பெற்றுக்கொள்ள முடியாது. எமக்கு 500 மில்லியன் அமெரிக்க டொலர்களை கொடுத்துவிட்டு அவர்கள் 1750 மில்லியம் அமெரிக்க டொலர்களை இலாபமாகப் பெற்றுக் கொள்வார்கள்.

இதையே நாம் எமது ஆதிக்கத்தில் அபிவிருத்தி செய்தால் 12 வருடங்களில் இந்த இலக்கை அடைய முடியும். 49 வீத உரிமத்தை இந்தியாவுக்கு கொடுப்பது விற்பதற்குச் சமமானது.

வெளிநாடுகளை எமது நாட்டில் தலையிட அனுமதிக்க முடியாது.

நாட்டின் சுயாதீனம், உரிமையை பாதுகாப்போம் என வீரவசனம் பேசிக்கொண்டுள்ளது அரசாங்கம். ஆனால் இந்தத் துறைமுகத்தை வெளிநாட்டுக்கு கொடுத்து மண்டியிடும் நிலைமை உருவாகும். மக்கள் இதனை விளங்கிக்கொள்ள வேண்டும்- என்றார். (எ)





# விமான நிலையங்கள் மீளத்திறப்பு

## முதல் விமானம் ஓமானிலிருந்து இலங்கையை வந்தடைந்தது

கொழும்பு,ஜன.22

இலங்கையில் சுமார் 10 மாதங்களுக்குப் பின்னர் விமான நிலையங்கள் நேற்றுத் திறக்கப்பட்டுள்ள நிலையில் முதல் விமானம் ஓமானிலிருந்து வந்துள்ளது.

ஓமானிலிருந்து குறித்த வணிக விமானம் நேற்றுக் காலை 07.40 மணியளவில் கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்துக்கு வந்துள்ளது.

இந்த விமானத்தின் மூலம் சுமார் 50 இலங்கையர்கள் நாடு திரும்பியுள்ளனர் என்பதுடன் அவர்கள் இராணுவத்தினரால் தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கும் அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

மேலும் வணிக விமானங்கள் மீண்டும் தொடங்கப்பட்டுள்ளமையால் பயணிகள் மீண்டும் சாதாரண விமானக் கட்டணத்துடன் பயணங்களை மேற்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. முன்னதாக கொரோனா வைரஸ் அச்சத்தால் விமான நிலையங்கள் மூடப்பட்ட காலகட்டத்தில் சிறப்பு விமானங்கள் மட்டுமே செயல்பட்டு வந்தன. அவற்றில் விமானக் கட்டணங்கள் மிக அதிகமாக இருந்தது. (எ)

# மேல் மாகாண பாடசாலைகளை பெப்ரவரியில் ஆரம்பிக்க முடிவு

கொழும்பு,ஜன.22

மேல் மாகாணத்திலுள்ள பாடசாலைகளை பெப்ரவரி மாதம் 15 ஆம் திகதி ஆரம்பிக்க எதிர்பார்த்துள்ளோம் என கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா தெரிவித்தார்.

சுகாதாரப் பணிப்பாளர் நாயகத்தின் பரிந்துரைகளை பெற்றுக்கொண்ட பின்னர் மேல் மாகாணத்தில் பாடசாலைகளை ஆரம்பிப்பது தொடர்பில் இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்படும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

புதிய பாடசாலை தவணைக்காக மேல் மாகாணம் மற்றும் தனிமைப்படுத்தப்பட்டுள்ள பிரதேசங்களைச் சேர்ந்த பாடசாலைகளைத் தவிர்ந்த அனைத்து பாடசாலைகளினதும் கல்விச் செயல்பாடுகள் வழமைபோன்று இடம்பெற்று வருகிறது.

மேல் மாகாணத்தின் பாடசாலைகளை மீண்டும் ஆரம்பிக்கக் கூடிய சாத்தியம் தொடர்பில் கலந்துரையாடியதன் பின்னர் கல்வி அமைச்சில் நேற்று இடம்பெற்ற விசேட சந்திப்பின் பின்னர் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். (எ)

# அமெரிக்க ஜனாதிபதி பைடனுக்கு ஜனாதிபதி கோட்டாபய வாழ்த்து



கொழும்பு,ஜன.22

அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாகப் பதவியேற்றுள்ள ஜோ பைடன் மற்றும் துணை ஜனாதிபதியாகப் பதவியேற்றுள்ள கமலா ஹாரிஸ் ஆகியோருக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

அமெரிக்காவின் 46ஆவது ஜனாதிபதியாக ஜோ பைடனும் துணை ஜனாதிபதியாக கமலா ஹாரிஸூம் நேற்று முன்தினம் பதவியேற்றனர்.

இந்நிலையில் அவர்களுக்கு வாழ்த்துத் தெரிவித்து தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் கணக்கில் பதிவிட்டுள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, தானும் தனது அரசாங்கமும் ஒரு வலுவான மற்றும் பரஸ்பர நன்மை பயக்கும் இருதரப்பு உறவை நோக்கி ஒன்றிணைந்து செயல்பட எதிர்பார்ப்பதாக குறிப்பிட்டுள்ளார். (எ)



# அமெரிக்கா - இலங்கை இடையில் இராஜதந்திர உறவு வலுப்பெறும்

## பிரதமர் மஹிந்த வாழ்த்து

கொழும்பு,ஜன.22

அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாகப் பதவியேற்றுள்ள ஜோ பைடன் மற்றும் துணை ஜனாதிபதியாக பதவியேற்றுள்ள கமலா ஹாரிஸ் ஆகியோருக்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ வாழ்த்து தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா - இலங்கை இரு நாடுகளுக்கும் இடையிலான உறவை மேலும் வலுப்படுத்த இணைந்து பணியாற்ற எதிர்பார்த்துள்ளோம் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். இதன்மூலம் இரு நாடுகளுக்கும் இடையில் உள்ள இராஜாந்திர உறவானது மேலும் வலுப்பெறும் என தாம் எதிர்ப்பார்ப்பதாகவும் தனது டுவிட்டர் பக்கத்தில் பிரதமர் பதிவிட்டுள்ளார். (எ)

# கொவிஷீல்ட் தடுப்பூசிக்கான ஒழுங்குமுறை அடுத்த வாரம்

கொழும்பு,ஜன.22

இந்தியாவில் தயாரிக்கப்படும் கொவிஷீல்ட் தடுப்பூசிக்கான ஒழுங்குமுறை அனுமதி அடுத்த வாரம் வழங்கப்படும் என தேசிய மருந்துகள் ஒழுங்குமுறை அதிகார சபையின் தலைமை அதிகாரி மருத்துவர் கமல் ஜயசிங்க தெரிவித்தார்.

இந்தியாவில் தயாரிக்கப்படும் கொவிஷீல்ட் தடுப்பூசி முதன்முதலில் பூட்டான், மாலைதீவு, பங்களாதேஷ், நேபாளம், மியன்மார் மற்றும் ஷீசெல்ஸ் ஆகிய நாடுகளில் விநியோகத்தை ஆரம்பித்துள்ளது என இந்திய வெளியுறவு அமைச்சு அறிவித்துள்ளது.

எனினும் இந்தத் தடுப்பூசிக்கு இலங்கை, ஆப்கானிஸ்தான், மொரீஷியஸ் ஆகிய நாடுகள் இன்னும் ஒப்புதல் வழங்கவில்லை என்பதால் கொரோனா

தடுப்பூசி இறக்குமதி தாமதமாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையிலேயே அடுத்த வாரம் தடுப்பூசிக்கான ஒழுங்குமுறை அனுமதி வழங்கப்படும் என இலங்கைத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)





யாழ் நீரிழிவுக்கழகத்தினரால் ஊர்காவற்துறை பிரதேச செயலகத்துக்கு நீரிழிவு, இரத்த அழுத்தம், உடல் திணிவு சுட்டி (பி.எம்.ஐ.) ஆகியவை பரிசோதிக்கும் உபகரணங்கள் அன்பளிப்பு செய்யப்பட்டு நீரிழிவு தொடர்பான செயலமர்வும் நடத்தப்பட்டது.

# ரஞ்சனுக்கு வழங்கிய தீர்ப்பு கடுமையானது

## லக்ஷ்மன் கிரியெல்ல கவலை



**கொழும்பு,ஜன.22**

**வழக்கு தீர்ப்பு தொடர்பில் பாராளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் விமர்சிக்க முடியும். உலக நாடுகளிலும் நீதிமன்றத் தீர்ப்புக்கள் வெளிப்படையாக விமர்சிக்கப்படுகின்றன. அத்துடன் ரஞ்சனுக்கு வழங்கப்பட்டிருக்கும் தீர்ப்பு மிகவும் கடுமையானதாகும் என ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் எதிர்க்கட்சி பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.**

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் எதிர்க்கட்சி உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ, ரஞ்சன் ராமநாயக்கவுக்கு வழங்கப்பட்டிருக்கும் தீர்ப்பு தொடர்பில் உரையாற்றிக் கொண்டிருக்கும்போது, அதனை எதிர்த்து சபை முதல்வர் அமைச்சர் தினேஷ் குணவர்த்தன, நீதிமன்ற தீர்ப்புக்களை விமர்சிப்பது நிலையியல் கட்டளைக்கு முரணானது எனத் தெரிவித்த கருத்துக்கு மறுப்புத் தெரிவித்து அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

நாம் தீர்ப்பு வழங்கிய நீதிபதிகளை விமர்சிக்க முடியாது. ஆனால், ரஞ்சன்ராமநாயக்கவுக்கு வழங்கப்பட்டிருக்கும் தீர்ப்பு, அவர் தெரிவித்த கருத்துக்கு சமாந்தரமான தீர்ப்பு அல்ல. மிகவும் கடுமையான தீர்ப்பு.

கடந்த 3 மாதங்களுக்கு முன்னர் இந்தியாவில் நீதிபதி ஒருவர் பிரதம நீதியரசரை மோசடிக்காரர் எனத் தெரிவித்திருந்தார். அதற்காக அவருக்கு வழங்கப்பட்ட தீர்ப்பு ஒரு ரூபா தண்டமாகும். அதனையும் அவர் செலுத்த மறுத்துள்ளார். தற்போது அந்தத் தீர்ப்புத் திகதி ஒத்திவைக்கப்பட்டிருக்கின்றது.

அதனால் இன்று நீதிமன்றங்களை விமர்சிப்பது கருத்து சுதந்திரத்துக்கு சமமாகவே செல்கின்றது. ஆரம்ப காலங்களிலேயே நீதிமன்றங்களை விமர்சிப்பது மிகவும் பாரதூரமான குற்றமாக இருந்தது. தற்போது உலகில் அந்த நடைமுறை எங்கும் இல்லை. நீதிமன்றங்களால் தவறான தீர்ப்பு வழங்கப்படும்போது அதனை திருத்தியமைக்க ஜனாதிபதிக்கு முடியும். அன்று ஞானசார தேரருக்கு நீதிமன்றம் சிறைத்தண்டனை வழங்கியபோது மைத்திரிபால சிறிசேன அந்த தீர்ப்பின் கடுமையை உணர்ந்து அவருக்கு பொது மன்னிப்பு வழங்கினார்.

அத்துடன் நீதிமன்றங்களில் இருப்பதும் எம்மைப்போன்ற மனிதர்கள். அவர்களும் தவறு செய்யலாம். அதற்காகத்தான் மேன்முறையீடுகள் செய்யப்படுகின்றன. அதனால் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு வழங்கப்பட்ட தீர்ப்பு மிகவும் கடுமையானதாகும். ரஞ்சன் ஒருவிடயத்தையே தெரிவித்தார். அதாவது நாட்டில் இருக்கும் நீதிபதிகள் மற்றும் சட்டத்தரணிகளில் அதிகமானவர்கள் ஊழல்வாதிகள் என்றே தெரிவித்தார்.

அதற்கு ஒரு உதாரணத்தை தெரிவிக்கின்றேன். முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் முன்னாள் பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் கூறிய விடயம்தான். என்னை பிரதமர் நீதியரசர் பதவியில் இருந்து நீக்கவேண்டாம். உங்களுக்குத் தேவையானமுறையில் வழக்குத் தீர்ப்புக்களை வழங்குவதாக தெரிவித்திருந்தார். அதனையே ரஞ்சன் தெரிவித்திருக்கின்றார்.

அதேபோன்று சிறைச்சாலைக்கு அனுப்பவேண்டியவரை ஆட்சி அதிகாரத்துக்கு அனுப்பியதாக முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா தெரிவித்திருந்தார். அதனால் நீதிமன்ற தீர்ப்புக்கள் தொடர்பில் விமர்சிப்பதை சிலர் ஆதரிக்கின்றனர். சிலர் எதிர்க்கின்றனர். அதனை விளங்கிக் கொண்டு நாங்கள் செயல்பட வேண்டும்- என்றார். (எ)

## மெரீனா கடற்கரையில் முள்ளிவாய்க்கால் நினைவுச்சின்னம்

சென்னை,ஜன.22

சென்னை மெரீனா கடற்கரையில் முள்ளிவாய்க்கால் நினைவுச்சின்னம் நிறுவ வேண்டும் என நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இறுதி யுத்தத்தில் உயிரிழந்தவர்களை நினைவுகூருவதற்கான வழிகளேதும், தமிழ் மக்களுக்கு இல்லாத நிலையில், சென்னை மெரீனா கடற்கரையிலோ அல்லது சென்னையின் வேறு பகுதியிலோ முள்ளிவாய்க்கால் நினைவுச்சின்னம் ஒன்றை தமிழ்நாட்டு அரசு நிறுவ வேண்டும் என நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் வி.உருத்திரகுமாரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

யாழ். பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி இடித்து அழிக்கப்பட்டது தொடர்பான கண்டனக் கூட்டம் நேற்று முன்தினம் லண்டனில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கேட்டுக்கொண்டுள்ளார். (எ)

## வெள்ளவத்தை சந்தையில் 12 பேருக்கு கொரோனா

### சந்தை தற்காலிகமாக பூட்டு

கொழும்பு,ஜன.22

வெள்ளவத்தை சந்தையில் பணியாற்றிய 12 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் இந்த சந்தை தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது என வெள்ளவத்தை சுகாதார மருந்துவ அதிகாரி தெரிவித்துள்ளார்.

மேலும் சில தினங்களாக வெள்ளவத்தைப் பகுதியில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்து வருகின்றது- என்றார். (எ)

## பல் வைத்தியரை தாக்கிய தம்மிக மீது விசாரணை ஆரம்பம்

கொழும்பு,ஜன.22

பேராதனை வைத்தியசாலையின் பல் வைத்தியர் ஒருவர் உள்ளிட்ட குழுவினர் மீது தாக்குதல் நடத்தி, அவர்களைச் சிறைப்படுத்தி வைத்ததாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில், 'தம்மிக பாணி" எனும் பெயரில் கொரோனாவுக்கான மருந்து என பாணி வகையொன்றை பிரசித்தம் செய்த ஆயுர்வேத வைத்தியர் எனக் கூறப்படும் தம்மிக பண்டாரவுக்கு எதிராக பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். கேகாலை மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவினர் இந்த விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர் என சப்ரகமுவ மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய தெரிவித்தார்.

இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பில், தாக்குதலுக்கு உள்ளானதாகக் கூறப்படும் பல் வைத்தியர் தரப்பினரதும், தாக்குதல் நடத்தியதாகக் கூறப்படும் தரப்பின் சிலரதும் வாக்கு மூலங்களைப் பதிவு செய்துள்ள கேகாலை மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸார், மேலதிக குற்றவியல் விசாரணைகளை தொடர்வதாக உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் கூறினார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

'சில நாள்களுக்கு முன்னர் பேராதனை வைத்தியசாலையின் பல் வைத்தியர் ஒருவரும் அவருக்கு நெருக்கமான சிலரும், கேகாலையில் உள்ள தம்மிக பண்டாரவின் வீட்டுக்குச் சென்றுள்ளனர். கொரோனா பாணியை பெறும் நோக்கில் அவர்கள் சென்றதாகக் கூறப்படுகின்றது.

இதன்போது, தம்மிக பண்டார தான் உற்பத்தி செய்த பாணி தொடர்பில் விளக்கமளிக்கும் போது, மேற்கத்தேய வைத்தியர்கள் மீது விமர்சனங்களை முன்வைத்துள்ளதாகக் கூறப்படுகின்றது. அதனை அந்த பல் வைத்தியர் தனது தொலைபேசியில் பதிவு செய்துள்ளதாகவும், அதனை அறிந்த தம்மிக பண்டார வைத்தியரின் தொலைபேசியை பறித்து பதிவுகளை அழித்த பின்னர், வைத்தியர் மீதும் அவரது சகாக்கள் மீதும் தனது குழுவினரோடு இணைந்து தாக்குதல் நடாத்தி சிறிதுநேரம் சிறைபிடித்து வைத்திருந்ததாகவும் கூறப்படுகின்றது. இந்தச் சம்பவம் தொடர்பில் பல் வைத்தியர், பேராதனை பொலிஸாருக்கு முறைப்பாடு செய்த நிலையில், மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவினர் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (எ)



## திருகோணமலை வைத்தியசாலை சிற்றூழியர்கள் பணிப்பகிஷ்கரிப்பு

திருகோணமலை,ஜன.22

திருகோணமலை மாவட்ட பொது வைத்தியசாலை சிற்றூழியர்கள் நேற்றுப் பணிப்பகிஷ் கரிப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வைத்தியசாலைக்கு வரும் நோயாளர்களை முதலில் தாங்களே கையாளுவதாகவும் எனினும் அதற்குப் போதிய பாதுகாப்பு நடவடிக்கைகளை வைத்தியசாலை வட்டாரங்கள் தமக்குப் பெற்றுத்தரவில்லை எனத் தெரிவித்து இந்த ஆர்ப் பாட்டத்தை முன்னெடுத்த னர்.

சமூக இடைவெளியைப் பேணி முன்னெடுக்கப்பட்ட இந்த ஆர்ப்பாட்டத்தில் திருகோணமலை பொது வைத்திய சாலையில் பணிபுரியும் அனைத்து சிற்றூழியர்களும் பங்குபற்றியிருந்தனர். பாதுகாப்பு அங்கிகள், கையுறைகள், முகக்கவசங்கள் என்பன அரசாங்கத்தாலோ வைத்தியசாலை நிர்வாகத்தினராலோ வழங்கப்படுவதில்லை எனவும் தமது சொந்தச் செலவிலேயே இவற்றைப் பெற வேண்டிய நிலைக்கு தாம் தள்ளப்பட்டுள்ளோம் என ஆர்ப் பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

மேலும் சிற்றூழியர்களுக்காக அரசாங்கத்தால் வழங்கப்பட்டிருக்கும் நீல நிற அங்கி யைக்கூட வைத்திய சாலை நிர்வாகம் இன்னமும் வழங்கவில்லை எனவும் அவர்கள் தெரிவித்தனர். (எ)

# பேரறிவாளன் விடுதலை: முடிவு ஆளுநரிடமாம்!

## இந்திய மத்திய அரசு வாதம்

புதுடில்லி, ஜன. 22

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனை பெற்று சிறையில் இருக்கும் பேரறிவாளனை விடுதலை செய்வது தொடர்பாக தமிழக ஆளுநரே 3 அல்லது 4 நாள்களில் முடிவெடுப்பார் என்று உச்ச நீதிமன்றத்தில் மத்திய அரசு தெரிவித்துள்ளது.

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி 1991, மே 21இல் தமிழகத்தின் ஸ்ரீபெரும்புதூரில் தற்கொலை தாக்குதலில் கொல்லப்பட்டார். இந்த சம்பவம் தொடர்பில் பேரறிவாளன் உட்பட 7பேர் 30 ஆண்டுகளாக சிறைத் தண்டனை அனுபவித்து வருகின்றனர்.

2014இல் இவர்களின் தண்டனை ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டது. 2018 இல் பேரறிவாளன் உட்பட ஏழு பேரை விடுதலை செய்யுமாறு தமிழக அமைச்சரவைகூடி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.



இந்த வழக்கில் விடுதலை கோரி இரு மனுக்களை உயர் நீதிமன்றில் பேரறிவாளன் தாக்கல் செய்திருந்தார். அத்துடன் அமைச்சரவை தீர்மானத்தை நிறைவேற்றுமாறு கோரியும் அவர் வழக்கு தாக்கல் செய்திருந்தார்.

இந்த வழக்கு விசாரணையின்போது இரு வருடங்களாக ஏன் ஆளுநர் முடிவு எடுக்கவில்லை என்று கேள்வி எழுப்பியிருந்தார். இந்த வழக்கில் இந்திய ஜனாதிபதிக்கே அதிகாரம் உள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில், தொடர்ந்த வழக்கில் நேற்றைய தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. இதன்போது இன்னமும் மூன்று அல்லது நான்கு நாட்களில் ஆளுநரே முடிவு எடுப்பார் என்று இந்திய மத்திய அரசின் தரப்பில் முன்னிலையான வழக்கறிஞர் தெரிவித்தார். இதையடுத்து இந்த வழக்கு நான்கு வாரங்களுக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. (ஐ)



### ஆட்சியில் இருந்து விலகும்நாளில்

# தனக்கு நெருங்கிய 73 பேருக்கு பொது மன்னிப்பு அளித்தார் ட்ரம்ப்

வாஷிங்டன், ஜன. 22

ஆட்சியில் இருந்து வெளியேறும் கடைசி நாளில் முன்னாள் ஆலோசகர் உட்பட 73 பேருக்கு ட்ரம்ப், பொது மன்னிப்பு வழங்கியுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் தோல்வியடைந்த முன்னாள் ஜனாதிபதி ட்ரம்ப், கடந்த ஒரு மாத காலமாக பல்வேறு குற்ற வழக்குகளில் தண்டனை பெற்றவர்களுக்கு தண்டனை குறைப்பு மற்றும் மன்னிப்பு வழங்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தார். ட்ரம்ப் இப்படி பொது மன்னிப்பு வழங்கியவர்களில் பெரும்பாலானவர்கள் அவருக்கு நெருக்கமானவர்களே.

தனது மகள் இவான்கா ட்ரம்பின் மாமனார் சார்ள்ஸ் குஷ்னர், ட்ரம்பின் தேர்தல் பிரசார மேலாளர் போல் மனாபோர்ட், முன்னாள் ஆலோசகர் ரோஜர் ஸ்டோன் உள்ளிட்டோருக்கு அவர் பொது மன்னிப்பு வழங்கியுள்ளார்.

இந்த நிலையில் ஆட்சியில் இருந்து வெளியேறும் கடைசி நாளன்றும் ட்ரம்ப் தனக்கு நெருக்கமானவர்களுக்கு பொது மன்னிப்பு வழங்கியிருந்தார். இதன்படி பண மோசடி வழக்கில் சிக்கிய தனது முன்னாள் ஆலோசகர் ஸ்ரீவ் பனன் உள்ளிட்ட 73 பேருக்கு ட்ரம்ப் கடைசி நாளில் பொதுமன்னிப்பு வழங்கியிருந்தார்.

வெள்ளை மாளிகை அதிகாரிகள் எதிர்ப்பு தெரிவித்திருந்த போதும், ஸ்ரீவ் பனனுக்கு பொதுமன்னிப்பு வழங்கப்பட்டதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.(ஐ)

# உலக சுகாதார நிறுவனத்துடன் அமெரிக்கா மீண்டும் இணையும்

## ட்ரம்பின் கொள்கைகளை மாற்றினார் பைடன்



வாஷிங்டன், ஜன. 22

உலக சுகாதார நிறுவனம், பாரிஸ் பருவநிலை மாற்ற ஒப்பந்தம் என்பவற்றில் மீண்டும் இணைதல் உள்ளிட்ட, முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் கொள்கைகளுக்கு எதிரான 15 முக்கிய உத்தரவுகளில் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் கையெழுத்திட்டுள்ளார்.

அமெரிக்காவின் 46ஆவது ஜனாதிபதி ஜோ பைடனும் (78) முதல் பெண் துணை ஜனாதிபதி கமலா ஹரிஸூம் (56) நேற்றுமுன்தினம் பொறுப்பேற்றனர்.

பதவியேற்ற முதல் நாளே, முன்னாள் ஜனாதிபதி ட்ரம்பின் கொள்கைளை புரட்டிப் போடும் படியான 15 உத்தரவுகளில் ஜனாதிபதி பைடன் கையொப்பமிட்டார்.

உலக சுகாதார நிறுவனம், பாரிஸ் பருவநிலை மாற்ற ஒப்பந்தம் என்பவற்றில் மீண்டும் இணைதல், அமெரிக்க - மெக்சிகோ எல்லைச் சுவர் கட்டுமானம் நிறுத்தம், அமெரிக்க - கனடா எரிவாயு இணைப்பு திட்டமான கீஸ்டோன் எக்ஸ்.எல். பைப்லைன் திட்டம் ரத்து உள்ளிட்ட உத்தரவுகளிலும் கையெழுத்திட்டுள்ளார்.

குடியேற்றம், இனவாத பிரச்னைகள் உள்ளிட்ட விவகாரங்களிலும் ட்ரம்பின் முடிவுகளை மாற்றும்படியான உத்தரவுகளை பைடன் பிறப்பித்துள்ளார். (ஐ)

# ஹெலிகொப்டர் விபத்தில் 3 அமெரிக்க வீரர்கள் பலி!



நியூயோர்க், ஜன. 22

நியூயோர்க்கில் தேசிய பாதுகாப்பு படையினர் பயிற்சியில் ஈடுபட்டபோது ஏற்பட்ட ஹெலிகொப்டர் விபத்தில் மூன்று வீரர்கள் பலியாகினர் என்று ஆளுநர் அன்ட்ரூ கியுமோ நேற்றுத் தெரிவித்தார்

“தேசியப் பாதுகாப்புப் படை வீரர்கள் மெண்டன் என்ற பகுதியில் வழக்கமான பயிற்சியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது கட்டுப்பாட்டை இழந்த ஹெலிகொப்டர் திடீரென தரையில் விழுந்து நொறுங்கியது.

இந்த விபத்தில் ஹெலிகொப்டரில் இருந்த மூன்று வீரர்கள் உயிரிழந்தனர். விபத்துக்கான காரணம் குறித்து நியூயோர்க் தேசிய காவல்படை மற்றும் பெடரல் ஏவியேஷன் நிர்வாகம் விசாரித்து வருகின்றது”, என்று கூறியுள்ளார். (ஐ)

# தீவு இல்லத்தில் குடியேறினார் முன்னாள் ஜனாதிபதி ட்ரம்ப்!

நியூயோர்க், ஜன. 22

தனது பதவிக்காலம் முடிந்தவுடன் வாஷிங்டனில் இருந்து வெளியேறிய அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி ட்ரம்ப், புளோரிடாவில் உள்ள பாம் பீச் தீவில் உள்ள மார் ஏ லாகோ எஸ்டேட் இல்லத்தில் குடியேறினார்.

வாஷிங்டனில் இருந்து ஏராளமான பொருட்களுடன் செல்லும் லொறிகள், பாம் கடற்கரையில் உள்ள மார் ஏ லாகோ இல்லத்தை நோக்கிச் சென்றன என்று “தி நியூயோர்க் ரைம்ஸ்” நாளிதழ் தெரிவித்தது.



டொனால்ட் ட்ரம்பின் குளிர்கால இல்லமாக மார் ஏ லாகோ இல்லம் வடிவமைக்கப்பட்டுள்ளது. கடந்த 2019ஆம் ஆண்டு நியூயோர்க்கில் உள்ள ட்ரம்ப் ரவர் இல்லத்திலிருந்து வெளியேறி மார் ஏ லாகோ இல்லத்தில் ட்ரம்ப் குடியேறினார்.

கடந்த 1985ஆம் ஆண்டு ஒரு கோடி அமெரிக்க டொலருக்கு வாங்கப்பட்ட இந்த மார் ஏ லாகோ இல்லம் கடந்த 4 ஆண்டுகளாக குளிர்காலத்தில் ட்ரம்ப் பயன்படுத்தும் இல்லமாக இருந்து வருகிறது.

20 ஏக்கர் பரப்பளவில் மூரிஷ் - மீடிட்டேரியன் கட்டமைப்பில் 128 அறைகளுடன் கடந்த 1927ஆம் ஆண்டு இந்த இல்லம் கட்டப்பட்டது. அத்திலாந்திக் பெருங்கடலை திறந்த வெளியில் ரசித்துக் கொண்டே குடியிருக்கும் வகையில் இந்த இல்லம் அமைக்கப்பட்டுள்ளது. 20 ஆயிரம் சதுர அடியில் உதைபந்தாட்ட மைதானம், 4 ரென்னிஸ் மைதானங்கள், நீச்சல் குளம் ஆகியவை அமைக்கப்பட்டுள்ளன.

வர்த்தக நோக்குடன் உருவாக்கப்பட்டுள்ள மார் ஏ லாகோ எஸ்டேட்டில் யார் வேண்டுமானாலும் கோடிக் கணக்கில் பணம் செலுத்தி உறுப்பினராகி வந்து செல்லலாம்.

இங்குள்ள ஒரு தனிப்பட்ட இல்லத்தில் ஜனாதிபதி ட்ரம்ப் தனது கடைசிக்கட்ட வாழ்க்கையைச் செலவிட உள்ளார் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஆனால், இங்குதான் ட்ரம்ப் வாழப்போகிறாரா அல்லது குளிர்காலத்துக்குப் பின் வெளியேறிவிடுவாரா என்று தெரியவில்லை. (ஐ)



## ஐ.பி.எல்லில் இருந்து
# மலிங்க ஓய்வு

கொழும்பு, ஜன. 22
மும்பை இந்தியன்ஸ் அணியிலிருந்து இலங்கையின் லசித் மலிங்க விடுவிக்கப்பட்டுள்ளார். இதையடுத்து அவர் அனைத்து வகையான லீக் கிரிக்கெட் போட்டிகளில் இருந்தும் ஓய்வை அறிவித்துள்ளார்.

ஐ.பி.எல். தொடரில் அதிகமான விக்கெட்களை வீழ்த்திய வீரர் என்ற பெருமையைக் கொண்டவர். மலிங்க. இந்த ஆண்டுக்கான ஐ.பி.எல். தொடரில் இருந்து அவரை விடுவிக்க மும்பை இந்தியன்ஸ் முடிவு செய்துள்ளது.

இந்தத் தகவல் வெளியான சில மணி நேரத்தில் தனது ஓய்வு முடிவை அறிவித்தார் மலிங்க. ஏற்கனவே அவர் சர்வதேச அளவிலான ஒருநாள், டெஸ்ட் போட்டிகளிலிருந்து ஓய்வு பெற்றுவிட்டார்.

இந்த ஆண்டு இந்தியாவில் நடக்கும் இருபது -20 உலகக் கிண்ணத் தொடரின் பின்னர் இலங்கை அணிக்கு விளையாடும் அவர், தொடர் முடிவில் தனது ஓய்வையும் அறிவிப்பார் என்று தெரிய வருகின்றது.

இந்நிலையில் மலிங்க வெளியிட்ட அறிக்கையில், " என்னுடைய குடும்பத்தாருடன் நடத்திய ஆலோசனைக்குப் பின், நான் அனைத்துவிதமான லீக் கிரிக்கெட் போட்டிகளில் இருந்தும் ஓய்வு பெற இது சரியான நேரம் என நினைக்கிறேன். கொரோனா தொற்று சூழல், நான் எந்த நாட்டுக்கும் பயணிக்க முடியாத கடினமான நேரமாக எனக்கு அமைந்துவிட்டது. எனது முடிவு குறித்து மும்பை அணி நிர்வாகத்திடம் கலந்து பேசினேன். அவர்கள் அடுத்துவரும் ஐ.பி.எல். ஏலத்துக்கு தயாராகும் நிலையில் இந்த முடிவை முன்கூட்டியே அறிவித்தேன்.

மும்பை இந்தியன்ஸ் அணியில் நான் இருந்தவரை என்னை குடும்பத்தில் ஒருவராகவே நடத்தினர். களத்திலும், வெளியிலும் 100 சதவீதம் நம்பிக்கையளித்து, ஊக்கமளித்து நான் சிறப்பாகச் செயல்பட வைத்தனர். நான் கிரிக்கெட் போட்டிகளில் சுதந்திரமாக செயல்படவும் மும்பை அணி நிர்வாகம் அனுமதித்தது. மகிழ்ச்சியான நினைவுகளை சுமந்துகொண்டு, மும்பை அணி நிர்வாகத்துக்கு நன்றி செலுத்தி விடை பெறுகிறேன்" என்று கூறியுள்ளார்.

மலிங்க, ஐ.பி.எல். தொடரில் 122 போட்டிகளில் விளையாடி, 170 விக்கெட்களைக் கைப்பற்றியுள்ளார். 13 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்களை வீழ்த்தியதே அவரின் சிறந்த பந்துவீச்சாக அமைந்தது. (ஐ)

# மேற்கிந்தியத் தீவுகளை வீழ்த்தியது பங்களாதேஷ்




டாக்கா, ஜன. 22
மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான முதல் ஒருநாள் கிரிக்கெட் ஆட்டத்தில் பங்களாதேஷ் 6 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இதனால், மொத்தம் 3 போட்டிகள் கொண்ட தொடரில் தற்போது வங்கதேசம் முன்னிலை வகிக்கிறது.

பங்களாதேஷின் தலைநகர் டாக்காவில் நேற்று முன்தினம் நடந்த ஆட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகள் முதலில் துடுப்பெடுத்தாடியது.

அந்த அணி, 32.2 ஓவர்களில் 122 ஓட்டங்களுக்கு சுருண்டது. அடுத்து ஆடிய பங்களாதேஷ் 33.5 ஓவர்களில் 4 விக்கெட் இழப்புக்கு 125 ஓட்டங்கள் எடுத்து வென்றது. பங்களாதேஷ் வீரர் ஷகிப் அல் ஹசன் ஆட்ட நாயகனாகத் தெரிவானார்.

சூதாட்ட தரகரால் அணுகப்பட்ட தகவலை தெரிவிக்காத மைக்காக ஐ.சி.சி. விதித்த 2 ஆண்டு தடை நிறைவடைந்த பிறகு முதன்முறையாக இந்த ஆட்டத்தில் ஷகிப் அல் ஹசன் பங்கேற்றிருந்தார்.

முன்னதாக நாணயச் சுழற்சியில் வென்ற பங்களாதேஷ் முதலில் பந்துவீச்சு வீசத் தீர்மானித்தது. துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகளில் அதிகபட்சமாக கைல் மேயர் மட்டும் 4 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸருடன் 40 ஓட்டங்களை சேர்த்தார். எஞ்சியோரில் ரோவ்மென் பாவெல் 2 பௌண்ட்ரிகள், 2 சிக்ஸர்கள் உள்பட 28, கப்டன் ஜசன் முகமது 17, ஆன்ட்ரே மெக்கார்தி 1 பௌண்ட்ரியுடன் 12 ஓட்டங்களை எடுத்தனர். ஏனையோர் ஒரிலக்க ஓட்டத்துடன் வெளியேறினர்.

பங்களாதேஷின் சார்பில் பந்துவீசிய தரப்பில் ஷகிப் அல் ஹசன் 4, ஹசன் மஹ்மூத் 3, முஸ்டாபிஸுர் ரஹ்மான் 2, மெஹதி ஹசன் 1 விக்கெட்டை சாய்த்தனர்.

123 என்ற வெற்றி இலக்குடன் ஆட்டத்தைத் தொடங்கிய பங்களாதேஷின் தொடக்க வீரர் லிட்டன் தாஸ் 2 பௌண்ட்ரிகளுடன் 14 ஓட்டங்களை சேர்க்க, உடன் வந்த கப்டன் தமிம் இக்பால் அதிகபட்சமாக 7 பௌண்ட்ரிகளுடன் 44 ஓட்டங்களை விளாசினார்.

அடுத்து வந்தவர்களில் நஜ்முல் ஹுஸைன் ஷான்டோ 1, ஷகிப் அல் ஹசன் 19 ஓட்டங்களை எடுத்தனர். இறுதியாக முஷ்பிகர் ரஹிம் 19, மஹ்முதுல்லா 1 பௌண்ட்ரியுடன் 9 ஓட்டங்களை சேர்த்து ஆட்டமிழந்தனர்.

மேற்கிந்தியத் தீவுகள் தரப்பில் அகில் ஹொசைன் 3, ஜசன் முகமது 1 விக்கெட் எடுத்தனர். (ஐ)

# டோனியுடன் ஒப்பிடாதீர்கள்
## ரிஷப் பந்த் தெரிவிப்பு

புதுடில்லி, ஜன. 22
"டோனியோடு என்னை ஒப்பிடுவதைக் கேட்க வியப்பாக இருந்தாலும். யாரோடும் என்னை ஒப்பிடாதீர்கள். நான் எனக்குரிய அடையாளத்துடனேயே விளையாட விரும்புகிறேன்", என்று இந்திய அணியின் விக்கெட் காப்பாளர் ரிஷப் பந்த் தெரிவித்தார்.

இந்திய அணி நாடு திரும்பிய நிலையில் பந்திடம் செய்தியாளர்கள் "உங்களை டோனியுடன் ஒப்பிட்டு பேசுகிறார்களே…", என்று கேள்வி எழுப்பினர்.

அதற்குப் பதிலளித்த அவர், "மகிழ்ச்சியாக இருக்கிறது. டோனி போன்ற சிறந்த வீரருடன் என்னை ஒப்பிட்டுப் பேசுவது மகிழ்ச்சியாகவும், வியப்பாகவும் இருக்கிறது. ஆனால், என்னைப் பொறுத்தவரை தோனியுடன் மட்டுமல்ல எந்த வீரருடன் என்னை ஒப்பிட நான் விரும்பவில்லை. இந்தியக் கிரிக்கெட்டில் நான் நானாக இருக்கவே விரும்புகிறேன். எனக்குரிய அடையாளத்துடன் விளையாடவே நான் விரும்புகிறேன். ஆதலால், டோனி போன்ற ஜாம்பவான்களுடன் என்னைப் போன்ற சிறிய வீரரை ஒப்படாதீர்கள்", என்றார். (ஐ)




## உதைபந்தாட்ட வரலாற்றில்
# ரொனால்டோ புதிய சாதனை

ரோம், ஜன. 22
உதைபந்தாட்ட வரலாற்றில் அதிக கோல்கள் அடித்த வீரர் என்ற சாதனையை கிறிஸ்டியானோ ரொனால்டோ படைத்தார்.

போர்த்துக்கல் உதைபந்தாட்ட அணியின் தலைவரான ரொனால்டோ உலகின் மிகச்சிறந்த உதைபந்தாட்ட வீரர்களில் ஒருவராக மதிப்பிடப்படுபவர். சர்வதேச போட்டிகளில் 100 கோல்கள் அடித்த இரு வீரர்களில் இவரும் ஒருவர்.

பிரபலங்களின் வருமானப் பட்டியலை அவ்வப்போது வெளியிடும் போர்பஸ் பத்திரிகை, ரொனால்டோவின் சாதனையைக் கடந்த வருடம் குறிப்பிட்டது. இதன்படி, 100 கோடி டொலர் (19 ஆயிரம் கோடி ரூபா) வருமானம் ஈட்டிய முதல் உதைபந்தாட்ட வீரர் என்ற பெருமையை ரொனால்டோ பெற்றார்.

இந்நிலையில் உதைபந்தாட்ட வரலாற்றில் அதிக கோல் அடித்த வீரர் என்கிற சாதனையை ரொனால்டோ படைத்துள்ளார். ரொனால்டோ இடம்பெற்றுள்ள ஜுவென்டஸ் அணி, இத்தாலியன் சுப்பர் கிண்ணத் தொடரை 9ஆவது முறையாக வென்றுள்ளது.

நேற்று முன்தினம் நடந்த இறுதிப் போட்டியில் ரொனால்டோவின் அணி நபோலி அணியை 2-0 எனத் தோற்கடித்து பட்டம் வென்றது. இதில் ரொனால்டோ ஒரு கோல் அடித்தார்.

இதன்மூலம் சர்வதேச மற்றும் கழகங்களுக்கான போட்டியில் தனது 760ஆவது கோலை அவர் அடித்தார். இதன்மூலம், 759 கோல்கள் அடித்த ஜோசெப் பிகானின் சாதனை முறியடிக்கப்பட்டது. இதுவரை 1040 போட்டிகளில் விளையாடியுள்ள ரொனால்டோ, ரியல் மட்ரிட் அணிக்காக 450 கோல்களும் மன்செஸ்டர் யுனைடெட் அணிக்காக 118 கோல்களும் போர்த்துக்கல் அணிக்காக 102 கோல்களும் ஜுவென் டஸ் அணிக்காக 85 கோல்களும் ஸ்போர்டிங் லிப்சன் அணிக்காக 5 கோல்களும் அடித்துள் ளார். 2013 ஆம் ஆண்டு அதிகபட்சமாக 69 கோல்கள் அடித்துள்ளார் என்பதும் குறிப்பிடத் தக்கது. (ஐ)

# தந்தைக்கு அஞ்சலி செலுத்தினார் சிராஜ்

புதுடில்லி, ஜன. 22
அவுஸ்திரேலியாவில் இருந்து இந்தியா திரும்பிய வேகப்பந்து வீச்சாளர் முஹமது சிராஜ் தனது தந்தைக்கு அஞ்சலி செலுத்தியுள்ளார்.

அவுஸ்திரேலியாவுக்கு சென்ற இந்திய அணியில் சிராஜும் இடம்பெற்றிருந்தார். அவரின் டெஸ்ட் அறிமுகம் இந்தத் தொடரிலேயே இடம்பெற்றது.

சிராஜ் தொடருக்காக அவுஸ்திரேலியாவில் இருந்தபோது, கடந்த நவம்பரில் அவரின் தந்தை முஹமது கோஸ் காலமானார்.

தனிமைப்படுத்தல் காரணங்களால் நாடு திரும்ப முடியாத நிலையில், தொடர் முடிவடைந்து நாடு திரும்பிய சிராஜ் தனது தந்தையின் சமா திக்கு சென்று அஞ்சலி செலுத்தினார்.



# தொல்லியல் திணைக்களத்தினர் நிலாவரையில் திடீர் அகழ்வாய்வு

யாழ்ப்பாணம்,ஜன.22

**நிலாவரைப் பகுதியில் தொல்லியல் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் தலைமையிலான குழுவினர் நேற்றுக்காலை திடீரென அகழ்வு ஆராய்ச்சிப் பணி என்ற பெயரில் தோண்டுதல் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர்.**



முன்னறிவித்தல் ஏதும் இன்றி இந்தப் பணிகளில் தொல்லியல் திணைக்களத்தினர் ஈடுபட்டுள்ளமை மக்கள் மத்தியிலும், மக்கள் பிரதிநிதிகள் மத்தியிலும் சந்தேகங்களைத் தோற்றுவித்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் அறிந்து வலி.கிழக்கு (கோப்பாய்) பிரதேச சபைத் தவிசாளர் அந்த இடத்துக்கு விரைந்து நிலைமைகளை அவதானித்து, இது தொடர்பில் தொல்லியல் திணைக்களத்தினரிடம் கேள்வி எழுப்பினார்.

இதன்போது தொல்லியல் ஆய்வுக்காகவே இந்த இடத்தில் தோண்டும் பணி இடம்பெறுவதாக தொல்லியல் திணைக்கள உதவிப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

நிலாவரை சுற்றுலா வலயம் என்பதன் அடிப்படையில் இங்கு தொல்லியல் ஆய்வுகளை மேற்கொண்டு தொல்லியல் பொருள்கள் எவையேனும் இருந்தால் அவற்றைக் காட்சிப்படுத்தும் நோக்குடனே இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதாகவும் அவர் கூறினார்.

இதேவேளை கட்டுமானப் பணிகள் ஏதேனும் இங்கு மேற்கொள்ளும் நோக்கம் உள்ளதா? எனவும் வலி.கிழக்கு பிரதேச சபை தவிசாளர் நிரோஷ், தொல்லியல் திணைக்களத்தினரிடம் கேள்வி எழுப்பினார். எனினும் அவ்வாறு எந்த நோக்கமும் இல்லை என தொல்லியல் திணைக்களத்தினர் பதிலளித்ததாக நிரோஷ் தெரிவித்தார்.

தொல்லியல் திணைக்களத்தின் அகழ்வாய்வு என்ற போர்வையில் வடக்கில் கடந்த காலங்களில் பௌத்த மயமாக்கல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்ட நிலையிலேயே இந்த அகழ்வாய்வு குறித்தும் சந்தேகங்கள் எழுந்துள்ளன. (எ)

# இஸ்லாமியர் ஒருவரின் சடலம் வவுனியாவில் நேற்று தகனம்

மன்னார்,ஜன.22

மன்னார் பொது வைத்தியசாலை தனிமைப்படுத்தல் விடுதியில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்தவரின் உடல் வவுனியா பூந்தோட்டத்தில் அமைந்துள்ள நகர சபையால் பராமரிக்கப்பட்டுவரும் மின் மயானத்தில் நேற்றுத் தகனம் செய்யப்பட்டது.

இருதய நோயாளியான இவர் மன்னார் பொது வைத்தியசாலை தனிமைப்படுத்தல் விடுதியில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் கடந்த 19 ஆம் திகதி காலை உயிரிழந்தார். மன்னார் உப்புக்குளத்தைச் சேர்ந்த 61 வயது இஸ்லாமியர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்தார்.

அவரது மாதிரிகள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்திய நிலையில் அவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

இந்நிலையில் பொலிஸார் மற்றும் சுகாதார அதிகாரிகளின் பிரசன்னத்துடன் நேற்று மதியம் 12 மணியளவில் அவரது உடல் வவுனியாவில் தகனம் செய்யப்பட்டது. (எ)

# தனிமைப்படுத்தலை மதிக்காத பல நிறுவனங்களுக்கு எதிராக

## பொலிஸார் சட்ட நடவடிக்கை



கொழும்பு,ஜன.22

மேல் மாகாணத்தில் தனிமைப்படுத்தல் மற்றும் தொற்று நோய்த்தடுப்பு சட்டவிதிகளுக்குப் புறம்பாக செயல்பட்ட 1,107 நிறுவனங்கள் கடந்த ஒன்பது நாளகளுக்குள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், அவற்றின் உரிமையாளர்கள் மற்றும் நிர்வாகப் பிரிவினருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

மேல் மாகாணத்திலுள்ள அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் தொடர்பில் கடந்த 12 ஆம் திகதி முதல் விசேட சோதனை நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

இந்நிலையில் கடந்த ஒன்பது தினங்களாக முன்னெடுக்கப்பட்டு வந்த கண்காணிப்பு நடவடிக்கைகளின் போது 6,240 நிறுவனங்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. அவற்றுள் 5,183 நிறுவனங்கள் சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றியிருந்ததுடன் 1,107 நிறுவனங்களில் அந்த விதிமுறைகள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை. இதன்போது சுகாதார விதிமுறைகளுக்குப் புறம்பாக செயல்பட்ட அனைத்து நிறுவனங்களுக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்- என்றார். (எ)

# இந்தியாவுக்கோ ஜப்பானுக்கோ கிழக்கு முனையத்தை விற்பதற்கு

## ஐ.தே.க.ஒப்பந்தம் செய்யவில்லை

கொழும்பு,ஜன.22

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையம் அல்லது துறைமுகத்தின் எந்தவொரு பகுதியையும் இந்தியாவுக்கோ ஜப்பானுக்கோ அல்லது வேறு நாடுகளுக்கோ விற்பதற்கு 2019 இல் எமது அரசாங்கம் எந்தவொரு ஒப்பந்தத்திலும் கையெழுத்திடவில்லை என ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் ஐ.தே.கவால் நேற்று வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையம் அல்லது அதன் எந்தவொரு பகுதியையும் இந்தியாவுக்கோ ஜப்பானுக்கோ அல்லது வேறு நாடுகளுக்கோ விற்பதற்கு 2019 இல் எமது அரசாங்கம் எந்தவொரு ஒப்பந்தத்திலும் கையெழுத்திடவில்லை. கிழக்கு முனையத்தில் செயல்பாடுகளை முன்னெடுக்கும் நிறுவனத்துக்கு மாத்திரமே ஒப்பந்தம் செல்லுபடியாகின்றதே தவிர மற்றுமொரு நாட்டுடன் அல்ல.

கிழக்கு முனையத்தின் அபிவிருத்திச் செயல்பாடுகளை நிறுவனம் ஒன்றுக்கு குத்தகைக்கு வழங்க இலங்கை, இந்தியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளுக்கிடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது. அதற்கமைய 51 வீத உரிமத்தை இலங்கைக்கும் எஞ்சிய 49 வீதத்தை இந்தியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது.



அத்துடன் அந்தப் பணிகளை முன்னெடுக்க நிறுவனமொன்றை ஸ்தாபிக்கவும் உறுதி செய்யப்பட்டது. இதனடிப்படையில் மூன்று நாடுகளுக்கிடையில் ஒப்பந்தம் கையெழுத்திடுவதற்கு 2019 செப்ரெம்பர் 10 ஆம் திகதி அமைச்சரவை அனுமதி வழங்கியது.

கிழக்கு முனையத்தை அபிவிருத்தி செய்வதற்குத் தேவையான உபகரணங்கள் மற்றும் கட்டமைப்புக்களை வழங்குவதற்கும் அதனை முகாமை செய்வதற்கும் டர்மினல் ஒப்ரேஷன் கம்பனி உருவாக்கப்பட்டது.

கிழக்கு முனையத்தை செயல்படுத்துவதற்கு குறிப்பிட்டதொரு காலம் டர்மினல் ஒப்ரேஷன் கம்பனிக்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்ததோடு, அதன் பின்னர் அதனைச் செயல்படுத்துவது இலங்கை அரசாங்கத்தின் தீர்மானத்திற்கமையவாகும்.

ஆகவே இங்கு எந்தவொரு சந்தர்ப்பத்திலும் கிழக்கு முனையத்தை விற்பதற்கான நிலைப்பாடுகள் முன்வைக்கப்படவில்லை. அதன் அபிவிருத்தி மற்றும் செயல்பாடுகள் என்பவற்றை இரு கட்டங்களாக முன்னெடுப்பதற்கே தீர்மானிக்கப்பட்டிருந்தது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# குளியாப்பிட்டி வைத்தியசாலையில் 4 வைத்தியர்கள் உட்பட 14 பேருக்கு கொரோனா

கொழும்பு,ஜன.22

கொழும்பு குளியாப்பிட்டி வைத்தியசாலையில் வைத்தியர்கள் நால்வர் உட்பட 14 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்ட துரித அன்ரிஜென் பரிசோதனைகள் மூலம் இவர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

வைத்தியர்கள் நால்வரை தவிர தாதிகள் 8 பேர் மற்றும் வைத்தியசாலை ஊழியர்கள் மூவர் இவ்வாறு தொற்றுக்குள்ளாகியுள்ளனர். (எ)

# தேசிய வளங்களை பிறநாட்டவர்களுக்கு அரசாங்கம் ஒருபோதும் தாரைவார்க்காது

## என்கிறார் அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன

கொழும்பு,ஜன.22

தேசிய வளங்களை பிறநாட்டவர்களுக்கு தாரைவார்க்கும் கொள்கை அரசாங்கத்துக்கு கிடையாது. கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையம் இந்திய நிறுவனத்துக்கு வியாபார நடவடிக்கைகளுக்காக மாத்திரமே வழங்கப்படுகின்றது. ராஜபக்ஷர்கள் தேசிய வளங்களை ஒருபோதும் விற்கமாட்டார்கள் என காணி விவகார அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்: 2001 தொடக்கம் 2004 வரையான காலப்பகுதியிலும், நல்லாட்சி அரசாங்கத்தின் காலப்பகுதியிலும் அரச காணிகள் அரசியல்வாதிகளின் ஆதரவுடன் கைப்பற்றப்பட்டுள்ளன. காணி மறுசீரமைப்பு சபைக்குச் சொந்தமான காணிகள் முறைகேடான வகையில் பயன்படுத்தப்பட்டுள்ளன. இந்த விடயம் தொடர்பில் காணி விவகார அமைச்சு மட்டத்தில் தற்போது விசாரணை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

காணி விவகாரத்தில் தமக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது என பொது மக்கள் கருதினால் தகுந்த ஆதாரத்துடன் காணி விவகார அமைச்சில் முறையிடலாம். விசாரணை நடவடிக்கைகளை முன்னெடுக்க விசேட பொலிஸ் பிரிவு ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. முறையற்ற வகையில் கையகப்படுத்தப்பட்டுள்ள அரச காணிகள் அரசுடைமையாக்கப்படும்.



கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையம் தொடர்பில் அறியாமையின் காரணமாகவே பலர் எதிர்ப்புக்களைத் தெரிவிக்கின்றனர். இதனையும் எதிர்த்தரப்பினர் தங்களின் அரசியல் தேவைக்காகப் பயன்படுத்திக் கொள்கின்றனர். கிழக்கு முனையத்தை விற்கும், குத்தகை அடிப்படையில் பிற நாட்டவர்களுக்கு வழங்கும் தீர்மானம் இல்லை என ஜனாதிபதி, பிரதமர் ஆகியோர் பகிரங்கமாகத் தெரிவித்துள்ளனர்- என்றார். (எ)

# பட்டாணிசூர் கிராமம் மீண்டும் முடங்கியது

வவுனியா, ஜன. 22

**கொரோனா தொற்று தொடர்ச்சியாக அதிகரித்து வருவதன் எதிரொலியாக வவுனியா பட்டாணிசூர் கிராமத்தின் சில வீதிகள் நேற்று மாலை 6 மணியிலிருந்து முடக்கப்பட்டன.**

**வவுனியா பட்டாணிசூரை சேர்ந்த கர்ப்பவதி பெண் மற்றும் பல்கலைகழக மாணவர் ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்ட நிலையில் குறித்த கிராமம் கடந்த நான்காம் திகதி முடக்கப்பட்டிருந்தது.**

இந்நிலையில் தொற்று உறுதி செய்யப்பட்டவர்களுடன் தொடர்புகளைப் பேணிய பலருக்கு பி.சி.ஆர். பரிசோதனைகளும் முன்னெடுக்கப்பட்டன. இதையடுத்து அந்தக் கிராமம் இரு வாரங்களுக்கு முடக்கப்பட்டது. இந்த முடக்கம் கடந்த திங்கட்கிழமை நீக்கப்பட்டது.

எனினும் கடந்த செவ்வாய்க்கிழமை வெளியான பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகளின் பிரகாரம் குறித்த பகுதியை சேர்ந்த 20 பேருக்கு தொற்று இருக்கின்றமை மீண்டும் உறுதிசெய்யப்பட்டிருந்தது.

இதையடுத்து பட்டாணிசூர் கிராமத்தின் 1ஆம், 2ஆம், 3ஆம் ஒழுங்கைகள் நேற்று மாலை 6 மணி தொடக்கம் முடக்கப்பட்டன. அந்தப் பகுதிகளுடன் எவரும் தொடர்பு கொள்ள முடியாதவாறு ஊரடங்கு சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன், இராணுவம் மற்றும் பொலிஸார் அப்பகுதிகளில் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். (ஐ)



## வீதியை திருத்தித் தருமாறு சிவநகர் மக்கள் கோரிக்கை

முல்லைத்தீவு, ஜன. 22

முல்லைத்தீவு- ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் அடிப்படை வசதிகள் பூர்த்தி செய்து கொடுக்கப்படாமை தொடர்பில் மக்கள் கவலை வெளியிடுகின்றனர்.

மழை காலங்களில் பெரும் சிரமங்களையும், ஆபத்துக்களையும் எதிர்கொண்டு வருவதாக முறிகண்டி - வசந்தநகர் கிராம மக்கள் தெரிவித்தனர்.

நீரோடை போன்று காட்சியளிக்கும் வீதியை பயன்படுத்தியே மக்கள் அன்றாட போக்குவரத்துக்களை முன்னெடுத்து வருகினறனர் என்று தெரிவித்தனர். புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்கு சொந்தமான குறித்த வீதியை புனரமைத்து தருமாறு பிரதேச சபை தவிசாளர் உள்ளிட்டோருக்கும், ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளருக்கும் பல்வேறு தடவை கோரிக்கை விடுக்கப்பட்ட போதிலும் தமக்கு தீர்வு வழங்கப்படவில்லை என அவர்கள் தெரிவிக்கின்றனர்.

நியூட்டன் வீதி என்ற அந்த வீதியை வசந்த நகர், இந்துபுரம், சாந்தபுரம் உள்ளிட்ட கிராமங்களின் மக்கள் பயன்படுத்தி வருகின்றனர். ஏ-9 வீதியையும் கிராமத்தையும் இணைக்கும் பிரதான வீதியாகவும் காணப்படுகின்றது. குறித்த வீதியில் காணப்படும் பாலம் ஆபத்தான பாலமாக காணப்படுவதாகவும், அதன் ஊடாக பயணிப்பதில் பெரும் ஆபத்தான நிலை காணப்படுவதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

இந்நிலையில், இந்த வீதியைப் பயன்படுத்தும் பாடசாலை மாணவர்கள் பலரும் அவலங்களை சந்திக்கின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, இந்த வீதியை திருத்தித் தருமாறு பாராளுமன்ற, பிரதேச சபை உறுப்பினர்களிடம் கோரிக்கை விடுத்தபோதிலும், இதுவரை நிறைவேற்றப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. மக்கள் மாணவர்களின் நலன் கருதி இந்த வீதியை திருத்தித் தருமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கல்வி tv
CHANNEL-1

**காலை**

5.15 மணி - தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி - தரம் 07 - கணிதம்
6.45 மணி - தரம் 08 - தமிழ்
7.30 மணி - தரம் 09 - கணிதம்
8.15 மணி - தரம் 10 - தமிழ்
9.00 மணி - க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) வரலாறு
10.00 மணி - க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) கணக்கீடு
11.00 மணி - க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப்பிரிவு) கணிதம்

**பகல்**

12.00 மணி - தரம் 10 - விஞ்ஞானம்
1.00 மணி - தரம் 09 - கணிதம்
2.00 மணி - தரம் 06 - ஆங்கிலம்
3.00 மணி - க.பொ.த சாதாரண தரம் கணிதம்
3.40 மணி - க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
4.20 மணி - க.பொ.த சாதாரண தரம் தகவல் விஞ்ஞானம்
5.00 மணி - க.பொ.த சாதாரண தரம் வர்த்தகம்
5.40 மணி - க.பொ.த சாதாரண தரம் சைவ சமயம்
6.20 மணி - க.பொ.த சாதாரண தரம் தமிழ்
7.00 மணி - க.பொ.த உயர்தரம் வணிகப்பிரிவு மாதிரி வினாத்தாள்

### சிங்களவர்களுக்காக உரிமை கோர
## நிலாவரை பகுதியில் ஏதோ ஒன்றை தொல்பொருள் பிரிவு புதைத்துள்ளது
### சட்டத்தரணி சுகாஷ் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், 22

நிலாவரை கிணற்றுக்கு அருகில் தொல்பொருள் திணைக்களத்தினர் நேற்று மேற்கொண்ட நடவடிக்கையில், சிங்கள மக்களின் கலாசாரத்தை பிரதிபலிக்கும் ஏதோ ஒரு பொருளை புதைத்துள்ளனர். பின்னொரு நாளில் இதை அகழ்ந்து அது, சிங்கள பிரதேசம் என கூறப் போகிறார்களா என்ற நியாயமான சந்தேகம் எமக்கு எழுந்துள்ளது என்று தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் சட்ட ஆலோசகரும் சட்டத்தரணியுமான க.சுகாஷ் தெரிவித்துள்ளார்.

நேற்று தொல்பொருள் திணைக்களத்தினர் நிலாவரையில் திடீரென சென்று ஒரு இடத்தில் அகழ்வாராய்ச்சி என்ற பெயரில் கிடங்கு வெட்டியிருந்தனர். ஆனால், அங்கு பலரும் கூடவே அதனை மூடி விட்டு சென்றனர்.

இதன்போதே அங்கு சென்றிருந்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் க. சுகாஷ் சந்தேகத்தை எழுப்பியிருந்தார்.

மேலும், எவருக்கும் எந்த அறிவித்தலும் கொடுக்காமல் பொலிஸ், இராணுவத்தினருடன் வந்த தொல்லியல் திணைக்களத்தினர் இங்கு பல அடி ஆழம் கொண்ட கிடங்கு ஒன்றை வெட்ட முற்பட்டனர். தகவலறிந்து பிரதேசசபையினரும், நாங்களும் வந்த போது, புல்லு செருக்குவதாக சொன்னார்கள். திடுதிப்பென கிடங்குகளை மூடினார்கள். புல்லு செருக்குவது என்றால், பல அடி ஆழம் கொண்ட கிடங்கை ஏன் வெட்ட வேண்டும்? எங்களை கண்டவுடன் அந்த கிடங்கை ஏன் மூட வேண்டும்? புல்லு செருக்க கிடங்கு வெட்ட வேண்டியதில்லை என்பது சிறு பிள்ளைகளுக்கும் தெரியும்.

எமக்கிருக்கும் நியாயமான கேள்விகள் இரண்டு. ஒன்று- சிங்கள மக்களின் கலாசாரத்தை பிரதிபலிக்கக்கூடிய ஏதோ ஒரு பொருளை புதைத்திருக்கிறார்கள். நாளைக்கோ, பின்னொரு நாளோ வந்து அதை அகழ்ந்து எடுத்து விட்டு, அது சிங்கள மக்களிற்கு சொந்தமானது எனக் கூறப் போகிறார்கள்.

அல்லது, சிங்கள மக்களின் கலாசாரத்தை பிரதிபலிக்கும் ஏதோ ஒரு கட்டுமானத்தை கட்ட முற்பட்டுள்ளனர். எது நடந்தாலும், அது தமிழ் மக்களின் அடையாளங்களுக்கு எதிரானது. தமிழர்களின் அடையாளங்களை அழித்து, கட்டமைக்கப்பட்ட இனஅழிப்பில் தொல்பொருள் திணைக்களம் ஈடுபட்டுள்ளது. இதை அனுமதிக்க முடியாது", - என்றார். (ஐ)

## றிப்கான் பதியுதீன் மீதான வழக்கு நேற்று விசாரணை



கொழும்பு, ஜன. 22

போலி காணி உறுதிகளை தயாரித்து தலைமன்னாரில் காணி ஒன்றை விற்பனை செய்ய முற்பட்டார் என்று குற்றஞ்சாட்டப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியூதீனின் சகோதரர் றிப்கான் பதியூதீன் உள்ளிட்ட மூன்று சந்தேக நபர்கள் தொடர்பில் நடத்தப்பட்ட விசாரணைகள் தொடர்பான இரசாயன பரிசோதகரின் அறிக்கை கிடைத்துள்ளன என்று கொழும்பு பிரதான நீதிவான் மொஹமட் மிஹார் நீதிமன்றத்தில் தெரிவித்திருந்தார்.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், இது தொடர்பான விசாரணை அறிக்கையை எதிர்வரும் மே 6 ஆம் திகதி நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறு குற்றப்புலனாய்வு திணைக்களத்திற்கு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

தலைமன்னாரில் 80 ஏக்கர் காணியை போலி உறுதி பத்திரங்களை தயாரித்து விற்பனை செய்தமை தொடர்பில் றிப்கான் பதியூதீன் உள்ளிட்ட மூவருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## நிலக்கரி கொள்வனவில் பெரும் ஊழல் நடக்கிறது
### சம்பிக்க எம்.பி. குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன. 22

நாட்டுக்குத் தேவையான மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கான நிலக்கரியைக் கொள்வனவு செய்வதற்கான விலைமனுக் கோரல் ஊடாக பெரும் மோசடி இடம்பெறுகின்றது என்று பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக குற்றஞ்சாட்டியிருக்கிறார்.

இலங்கை மின்சாரசபை, சிலோன் நிலக்கரி நிறுவனம், மின்வலு சக்தி அமைச்சு ஆகியவை கொள்வனவு செய்த நிலக்கரியை மீண்டும் அதிக விலைக்கு நிலக்கரியைக் கொள்வனவு செய்யும் திட்டத்தை நடைமுறைப்படுத்துகின்றன. நிலக்கரி மின்னுற்பத்தி ஆலை ஆரம்பிக்கப்பட்டது தொடக்கம் இந்த செயல்பாடு இடம்பெறுகிறது. கடந்த காலத்தில் நான் அமைச்சராக இருந்தபோதும் இத்தகைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

அதனைத் தடுப்பதற்கு முற்பட்ட காரணத்தினால் எனக்கு அந்த அமைச்சுப்பதவி இல்லாமல் செய்யப்பட்டது. இந்நிலையில் தற்போது மீண்டும் அவ்வாறான மோசடி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன - என்றார்.

## சுகாதார பரிசோதகருக்கு எச்சில் துப்பியவருக்கு 6 ஆண்டு சிறை

கொழும்பு, ஜன. 22

கம்பஹா - அட்டுலுகம பகுதியில் வைத்து பொது சுகாதார பரிசோதகர்கள் மீது எச்சில் துப்பிய கொரோனா தொற்றாளருக்கு 6 ஆண்டுகள் கடூழிய சிறைத்தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

குறித்த நபருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மூன்று வழக்குகளுக்கு தலா இரண்டு ஆண்டுகள் வீதம் இவ்வாறு 6 ஆண்டுகள் சிறைத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது. பாணந்துறை நீதிமன்றத்தினால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த டிசெம்பர் 2 ஆம் திகதி குறித்த கொரோனா தொற்றாளரை அழைத்துவரச் சென்ற பொழுது, 'நீயும் கொரொனாவை வாங்கு", என்று கூறி பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மீது எச்சில் துப்பிய தோடு, வாகனத்தில் செல்லவும் மறுப்பு தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

**கரைத்துறைபற்று பிரதேச சபை அமர்வில்**

# போரில் இறந்த மக்களுக்கு மெழுகுதிரி ஏந்தி அஞ்சலி

முல்லைத்தீவு, ஜன. 22

போரில் உயிரிழந்த மக்களை நினைவுகூர்ந்து மெழுகுதிரி ஏந்தி கரைத்துறைப்பற்று பிரதேச சபை அமர்வில அஞ்சலி செலுத்தப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைத்துறைப்பற்று பிரதேச சபையின் மாதாந்த அமர்வு நேற்று சபையின் தவிசாளர் க.தவராசாவின் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது, பல விடயங்கள் தொடர்பில் பேசப்பட்டன. குறிப்பாக குருந்தூர் மலை விவகாரம் தொடர்பில் விவாதிக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து, யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் கோரிக்கைக்கு அமைவாக கரைத்துறைப் பற்று பிரதேச சபை உறுப்பினர்கள் அனைவரும் ஒரு தொகையை நிதியை சேகரித்து அந்த நிதியை முள்ளிவாய்க்கால் இறுதி யுத்தம் இடம்பெற்ற இடத்தில் உள்ள தூபியில் வழங்குவதென முடிவானது.

அத்துடன், பல்கலைகழக தூபி இடிப்புக்கு கண்டனம் தெரிவிக்கப்பட்டு உயிரிழந்த உறவுகளை நினைவேந்தி மெழுகுவர்த்தி ஏற்றி இரண்டு நிமிட அஞ்சலியும் செலுத்தப்பட்டது. (ஐ)

# கிளிநொச்சி கந்தன் குளம் உடைப்பெடுக்கும் அபாயம்

கிளிநொச்சி, ஜன. 22

கிளிநொச்சி ஆனந்தநகர் பகுதியில் அமைந்துள்ள கந்தன்குளத்தின் அணைக்கட்டின் ஊடாக பெருமளவு நீர் வெளியேறி வருவதனால் அணைக்கட்டு ஆபத்தான நிலையில் காணப்படுகிறது.

அணைக்கட்டின் துருசு பகுதியின் அருகில் குளத்திலிருந்து நீர் அணைக்கட்டின் ஊடாக வெளியேறிவருகிறது. இது அணைக்கட்டின் மிக மோசமான நிலைமையாகும்.

எனவே, இராணுவம் மற்றும் பொது மக்கள் நீர்ப்பாசனத் திணைக்களம் ஆகியோர் இணைந்து மண் மூடைகளை அடுக்கி தடுக்கும் பணியில் நேற்று ஈடுப்பட்டுள்ளனர்.

இருப்பினும் சேவியர் கடைச் சந்திக்கருகில் குளத்தின் கீழ் பகுதி மற்றும் கந்தன்குளத்தின் நீர் வெளியேறுகின்ற உருத்திரபுரம் பகுதியில் வாழ்கின்றமக்களை அவதானமாக இருக்குமாறும் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் அறிவித்துள்ளது. (ஐ)

# தமிழ் சிறப்பு தகைமையானால் அடிப்படைவாதம் மேலோங்கும்

## இப்படி சொல்கிறார் எல்லே குணவன்ச தேரர்

கொழும்பு, ஜன. 22


'பொலிஸ் பரிசோதகர் நியமனத்தில் தமிழ் மொழியில் தேர்ச்சி பெற்றிருப்பது விசேட தகைமையாக கருதப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளமை அரசமைப்பின்12(1) அத்தியாயத்திற்கு முரணாகும். மொழி அடிப்படையில் நியமனம் வழங்கினால் முஸ்லிம் இனத்தவர்கள் அதிகளவில் உள்வாங்கப்படுவார்கள். இது அரசமைப்பிற்கும், நாட்டு மக்களுக்கும் இழைக்கும் துரோகமாகும். எனவே இதனைத் தவிர்க்க வேண்டும் என்று தேசத்தை பாதுகாக்கும் தேசிய அமைப்பின் தலைவர் எல்லே குணவன்ச தேரர் தேரர் 12 பேரின் கையொப்பத்துடன் ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்பி வைத்துள்ளார்.

அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:

நீதியமைச்சர் அலிசப்ரி ஜனாதிபதியிடம் முன்வைத்துள்ள கோரிக்கைக்கு அமைய பொலிஸ் திணைக்களத்துக்காக பொலிஸ் பரிசோதகர் பதவிக்கு 150 வழக்கறிஞர்களை இணைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் பரிசோதகர் பதவிக்கு இணைத்துக் கொள்ளப்படுபவர்கள் தமிழ் மொழியில் தேர்ச்சி பெற்றுள்ளமை விசேட தகைமையாக கொள்ளப்படும் என குறிப்பிடப்பட்டுள்ளது. இஸ்லாமிய அடிப்படைவாத்துக்கு சார்பாக அமையும் மற்றொரு செயலாக இதனைக் கருத வேண்டும். பாரம்பரிய முஸ்லிம் சமூகத்தினருக்கு எதிராக நாம் செயற்படவில்லை. முஸ்லிம் மக்களை கேடயமாக கொண்டு ஒரு சில முஸ்லிம் அரசியல்வாதிகள் அரசியல் பலத்தை பிரயோகித்து இஸ்லாமிய அடிப்படைவாதத்தை வலுப்படுத்த முனைகிறார்கள். இவ்வாறான செயல்களாகல் சாதாரண முஸ்லிம் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

நாட்டின் சனத்தொகை அடிப்படையில், தமிழ், சிங்கள மக்களின் சனத்தொகையை காட்டிலும் முஸ்லிம் மக்களின் சனத்தொகை அதிகரித்த வண்ணம் உள்ளது. சட்டத்துறையிலும் முஸ்லிம் சமூகத்தினர்



அதிகளவில் ஈடுபட்டுள்ளார்கள். தமிழ் மொழியில் தேர்ச்சி விசேட தகைமை என்பதை நடைமுறைப்படுத்தினால் முஸ்லிம் சமூகத்தினரில் பெரும்பாலானோர் பொலிஸ் பரிசோதகர்களாக இணைத்துக் கொள்ள வாய்ப்புண்டு.

முஸ்லிம் அரசியல்வாதிகளின் நோக்கம் தற்போது வெளிப்பட்டுள்ளது. முஸ்லிம் அரசியல்வாதிகள் தங்களுக்கு பொறுப்பான அமைச்சின் ஊடாக இலங்கை நுகர்வோர் அதிகார சபை, துறைமுக அதிகார சபை ஆகியவற்றுக்கு தமது இனத்தவர்களுக்கு அதிக தொழில் நியமனங்களை வழங்கியுள்ளார்கள். குறுகிய காலத்தில் முஸ்லிம் சமூகத்தினர் சட்டக்கல்லூரிக்கு அதிகளவில் உள்வாங்கப்பட்டமை சந்தேகத்துக்குரியது. அத்துடன் நீதிமன்ற சேவை மொழிப்பெயர்ப்பாளர்களாகவும் செயற்படுகிறார்கள்.

இவ்வாறன நிலையில் பொலிஸ் பரிசோதகர்களாக முஸ்லிம் சமூகத்தின் வழக்கறிஞர்கள் அதிகம் இணைத்துக் கொள்ளப்பட முயற்சிப்பதன் உள்நோக்கம் அவதானத்திற்குரியது.

அரசமைப்பு குறித்து போதிய தெளிவில்லாமல் நீதியமைச்சர் செயல்படுகிறார் - என்றும் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# இலங்கை கிரிக்கெட் அணியின் இரு வீரர்களுக்கு கொரோனா

கொழும்பு, ஜன.22

இலங்கை கிரிக்கெட் அணியில் வீரர்கள் இருவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

சம்பிக்க கருணாரத்ன மற்றும் பிநுர பெர்னாண்டோ ஆகியோருக்கே கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டதாக இலங்கை கிரிக்கெட் சபை தெரிவிக்கின்றது.

இவர்கள், மேற்கிந்தியத் தீவுகளில் நடைபெறவிருக்கும் ஒரு நாள் சர்வதேச கிரிக்கெட் போட்டி மற்றும் இருபது - 20 சர்வதேச தொடர்களுக்காக பயிற்சி பெற்று வந்தனர் என்று இலங்கை கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

மேலும், இவர்கள் கொழும்பில் மூன்று தனித்தனி குழுக்களில் பயிற்சி பெற்றனர் என்று கூறப்படுகிறது.

தொற்றுக்குள்ளான இரண்டு வீரர்களும் கொரோனா கிச்சைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்கள் என இலங்கை கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

பாதிக்கப்பட்ட கிரிக்கெட் வீரர்களுடன் தொடர்பு கொண்ட ஏனைய கிரிக்கெட் வீரர்களை அடையாளம் காண சுகாதார அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ)



# "ஒட்டுசுட்டானுக்கு தனி பிரதேச சபை வேண்டும்"

முல்லைத்தீவு, ஜன. 22

முல்லைத்தீவில் அதிகளவு பரப்பளவைக் கொண்ட ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவில், தனிப் பிரதேச சபை அமைய வேண்டும் என்று புதுக்குடியிருப்பு பிரதேச சபை உறுப்பினர் சதாசிவம் சத்திய சுதர்சன் தெரிவித்தார்.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட அவர், ஒட்டுசுட்டான் பிரதேச செயலகர் பிரிவில் 6,706 குடும்பங்களைச் சேர்ந்த 20 ஆயிரத்து 784 பேர் வாழ்ந்து வருகின்றனர் எனவும் ஆனால், இங்கு தனிப் பிரதேச சபை இல்லை எனவும் கூறினார்.

புதுக்குடியிருப்பு பிரதேச சபையாலேயே ஒட்டுசுட்டான் பிரதேசம் நிர்வகிக்கப்படுகின்றதெனத் தெரிவித்த அவர், தனிப் பிரதேச சபை உருவானால் பிரதேச அபிவிருத்தியில் சுயமாக முடிவெடுக்க முடியுமெனவும் கூறினார்.

அத்துடன், வேலை வாய்ப்புகளை அதிகரிக்க முடியுமெனக் கூறிய அவர், மக்கள் இலகுவாக பிரதேச சபையை அணுகவும் முடியுமென்றார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் அதிக பரப்பளவைக் கொண்ட (618 கிலோமீற்றர்) பிரதேச செயலகமாக ஒட்டுசுட்டான் பிரதேச செயலகம் காணப்படுகின்றதெனத் தெரிவித்த அவர், இந்தப் பிரதேச செயலகப் பிரிவில் ஒட்டுசுட்டான், மாங்குளம் ஆகிய இரு பொலிஸ் நிலையங்கள் காணப்படுகின்றன எனவும் கூறினார்.

'எனவே, தனிப் பிரதேச சபை உருவானால், அரச நிதி ஒதுக்கீட்டைத் தனியாகப் பெற்றுக் கொள்ள முடியும். மக்களுக்கு இலகுவாக திருப்தியான சேவையை வழங்க முடியும்' எனவும், அவர் தெரிவித்தார்.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலகப் பிரிவை விட குறைவான மக்கள் தொகையைக் கொண்ட மாந்தை கிழக்கு, துணுக்காய் ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில், தனித் தனிப் பிரதேச சபைகள் இயங்குகின்ற போது, ஒட்டுசுட்டானில் மட்டும் ஏன் தனிப் பிரதேச சபை உருவாக்கப்படவில்லை எனவும், அவர் வினவினார்.

இது தொடர்பாக முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்திலும் ஒட்டுசுட்டான் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் தொடர்ச்சியாக குரல் எழுப்பி வருகின்ற போதிலும், ஒட்டுசுட்டானுக்கான தனிப் பிரதேச சபை அமைக்கப்படவில்லை எனவும் அவர் சொன்னார்.

அருந்ததி
இணைய திருமண சேவை

| மணமகன் விபரம் | மணமகள் விபரம் |
| --- | --- |
| 15254 \| வே \|1987<br>யாழ்ப்பாணம் \| இந்து<br>Restaurant Staff \| Switzerland<br>சுவாதி(துலாம்) \| 173.7செ.மீ | 15050 \| வே \|1994<br>ராமநாதபுரம் \| இந்து<br>N/A \| Sri Lanka \| கூ.செவ் : 08<br>உத்திரட்டாதி(மீனம்) \| 156செ.மீ |
| 15465 \| வே \|1987<br>யாழ்நகரம் \| இந்து \| செவ் : 12<br>Staff \| Australia \|<br>அனுஷம் (விருச்சிகம்) \| 183செ.மீ | 15480 \| வே \|1994<br>புங்குடுதீவு \| இந்து \| Sri Lanka \|<br>Management Accounts Assistant \| செவ் : 07<br>புனர்பூசம் (மிதுனம்) \| 167செ.மீ |
| 15263 \| வி \|1987<br>அச்சுவேலி \| இந்து \| லக்.செவ்<br>Civil Engineer \| Singapore<br>மகம்(சிம்மம்) \| 171செ.மீ | 15173 \| வே \|1995<br>வவுனியா \| இந்து<br>Research Assistant \| UK<br>ரேவதி (மீனம்) \| 164செ.மீ |
| 15682 \| வே \|1987<br>அரியாலை \| இந்து \| செவ் : 12<br>Grade Officer \| Sri lanka \|<br>கேட்டை(விருச்சிகம்) \| 178செ.மீ | 15709 \| வே \|1995<br>காரைநகர் \| இந்து \|<br>Accountant \| Sri Lanka \|<br>மூலம்(தனுசு) \| 155செ.மீ |
| 15368 \| கோ \|1987<br>சுன்னாக நகரம் \| இந்து \| செவ் : 08<br>Accountant \| Canada \|<br>பூரட்டாதி(கும்பம்) \| 168செ.மீ | 15191 \| வே \|1995<br>யாழ்நகரம் \| இந்து \|<br>English Teacher \| Sri lanka \|<br>அத்தம் (கன்னி) \| |

20, கே.கே.எஸ் வீதி கொக்குவில் யாழ்ப்பாணம்
0777 164 524 www.arunthathee.com

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்


## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திபாடல்
6.30 மணி : வணக்கம் டான்



6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
வழங்குபவர் : சொல்லருவி லலீசன்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
வழங்குபவர் : சைவ சித்தாந்த பண்டிதன் சிவஸ்ரீ.தியாக.சோமஸ்கந்தராஜக்குருக்கள்
7.05 மணி : உளவியல் கருத்து
வழங்குபவர் திருமதி கோகிலா மகேந்திரன்
7.15 மணி : கதைவழி அறமொழி
வழங்குபவர் : திரு. எப்.எக்ஸ் அன்ரன் கோட்டக்கல்விப் பணிப்பாளர், நல்லூர்
7.20 மணி : சித்த மருத்துவம்
வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகள்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை- நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : பாரதீ

**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
1.00மணி : துறைக்கு அப்பால்(மறுஒளிபரப்பு)
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-திரைப்படங்களிலிருந்து காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-நேரலை



5.30 மணி : Short Film
6.00 மணி : ஹொலிவுட் சுப்பர் 10




**இரவு**
7.00 மணி : Tiktok
7.30 மணி : பத்துக்கு பத்து
8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : அந்தக்காலம் இந்தக்காலம்-“அப்பா”



10.00 மணி : யாவரும் கேளீர்

## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் வடிவேல் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை

**இரவு**
7.00 மணி : ஓய்வெடு நிலவே
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி TV CHANNEL-1

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - கணிதம்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - தமிழ்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) வரலாறு
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) கணக்கீடு
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) கணிதம்

**பகல்**
12.00 மணி : தரம் 10 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 09 - கணிதம்
2.00 மணி : தரம் 06 - ஆங்கிலம்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் கணிதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் தகவல் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் வர்த்தகம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் சைவ சமயம்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் தமிழ்

**இரவு**
7.00 மணி : க.பொ.த உயர்தரம் வணிகப்பிரிவு மாதிரி வினாத்தாள்

## ஓம் ரிவி

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.20 மணி : சின்மய சிந்தனை
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : யாழ்ப்பாணம் சித்தன்கேணி ஸ்ரீ நாககன்னி அம்பாள் ஆலயம்
10.00 மணி : ஐயப்பன் பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : யாழ்ப்பாணம் மல்லாகம் பழம்பதி தேவஸ்தானத் திருவிழா
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
08.00 மணி : யாழ்ப்பாணம் சித்தன்கேணி ஸ்ரீ நாககன்னி அம்பாள் ஆலயம்

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : ஆலயப் பாடல்கள்
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : மாதா மன்றாட்டு மாலை
10.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
10.30 மணி : புனித மிக்கேல் மன்றாட்டு
11.30 மணி : ஜெபமாலை

**பகல்**
12.00 மணி : பாடல்
1.00 மணி : மட்டக்களப்பு திருப்பலி
2.00 மணி : திருகோணமலைத்திருப்பலி
3.00 மணி : பாடல்
4.30 மணி : திருகோணமலை திருப்பலி

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : இஸ்லாமிய உலகம் (மறு ஒளிபரப்பு)
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு
8.30 மணி : மனதோடு பேசலாம்

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 22.01.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.